www.tamilrangam.net

THEDAL 1989 வைகாசி

-OPAL

# தேடல்

4



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# எமது தேடலில்...

## யதார்த்த உணர்வுடன் சிந்திப்போம்

இயல்பாகவே இருக்கக்கூடிய குறைநிறைகள் எமது 'தேடலிலும்' உள்ளனவென்பதை எமக்கு எட்டுகின்ற விமர்சனங்கள் புலப்படுத்தி நிற்கின்றன. விமர்சனங்களை நாங்கள் மதிக்கிறோம், ஏற்றுக்கொள்கிறோம். தொடர்ந்தும் உங்களது விமர்சனங்கள் தேடலை மேலும் செழுமைப்படுத்தும் எனவும் எதிர்பார்க்கிறோம்.

நாம் எதிர்கொள்ளும் விமர்சனங்களைப் பொறுத்தவரையில் இருவகையான போக்குகளை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ஒன்று விமர்சனங்கள் கூராக இருந்தபோதும் தேடலை வளர்த்தெடுக்க வேண்டும் என்கின்ற நோக்கில் விமர்சிக்கப்படுபவை. இரண்டாவது, விசமத்தனமான முறையில் 'தேடலை' நகரவிடாது தடுத்துநிறுத்தும் நோக்கில் அமைபவை. இதில் முதலாவது வகையைப் பொறுத்த வரையில் அவ்வகையான விமர்சனங்களை வரவேற்கிறோம். அவற்றிற்குப் பதிலளிக்கும்போது, பதிலளிக்கும் தன்மையில் ஏற்படும் குறைபாடுகளைக்கூடிய வரையில் நிவர்த்தி செய்ய முயற்சிக்கிறோம்.

ஆனால், இரண்டாவது வகையான விமர்சனங்களைப் பொறுத்தவரையில் கவலைக்குரியது. ஏனெனில் அழிவிலே திருப்திகாணும் வக்கிர எண்ணம் கொண்டவர்களின் மனவெளிப்பாட்டினைத்தான் அவை வெளிக்காட்டி நிற்கின்றன.

இன்றைய ஈழத்தின் சமகால அரசியல் நிலைமைகளை நோக்கும்போது ஒன்றில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தினை தொடர்ந்து நடாத்துதல், அல்லது போராட்டம் நிறுத்தப்பட்டு தற்காலிக அமைதியைப் பயன்படுத்தி சரியான வழியில் போராட்டத்தை நகர்த்துவதற்குரிய முன்னெடுப்புக்களைச் செய்தல், என்னும் இரு யதார்த்தத் தன்மைகளைத் தான் காணக்கூடியதாகவுள்ளது. இவ்விரண்டில் ஏதாவது ஒன்றினை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

டாகவேதான் அடுத்தகட்டத்திற்கு நகரமுடியும்.

போராட்டத்தை தொடர்வது சரியா, அல்லது அமைதிச் சூழலினூடாக அடுத்த கட்டத்திற்கு நகர்வது சரியா என்கிற ஆய்வு ஒருபுறமிருக்க, இத்தகைய யதார்த்த நிலைமைகளை நாம் விளக்கமுற்படும் போது புலத் தளத்தில் இருக்கும் இயக்கங்கள் சிலவற்றுடன் விரும்பியோ, விரும்பாமலோ கருத்தியல் ஒற்றுமை, அல்லது முரண்பாடு ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகிப் போகிறது. அதற்காக சில அமைப்புக்களுடன் 'தேடல்' ஐக்கியப்பட்டுவிட்டது என்று அர்த்தப்படுத்தலாமா?

ஆனால் சில விசமிகள், வெளிநாடுகளில் ஒரு பொதுவான அமைப்பு உருவாகுவதையோ, ஓரளவேனும் வெளிநாட்டுத் தமிழர்கள் மத்தியில் ஒரு சிந்தனை மாற்றம் ஏற்படுவதையோ விரும்பாமல், அத்தகைய முயற்சியை தடுத்து நிறுத்தும் நோக்கில் செயற்பட்டுவருகின்றனர். இவற்றில் சில அமைப்புக்களுடன் தேடலை தொடர்புபடுத்துவது, இதனால் அவ்வமைப்புக்களுக்கு மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய வெறுப்பை 'தேடல்' மீதும் ஏற்படுத்துவது, பின்னர் தேடலுக்கும் குறிப்பிட்ட அமைப்புக்களுக்கும் முரண்பாடுகள் ஏற்படும்போது, அவ்வமைப்புக்களின் ஆதரவாளர்கள் மத்தியில் இருந்தும் தேடலை அந்நியப்படுத்தி அழித்து விடுவது, என்பதான இவர்களின் உள்ளார்ந்த நோக்கத்தைத்/ தான் இவர்களது நடவடிக்கைகள் காட்டி நிற்கின்றன.

எம்மைப் பொறுத்தவரையில் நாம் இங்கு ஒரு புரட்சிகரக் கட்சி கட்ட முற்படவில்லை. பாட்டாளி வர்க்கத்தை ஒன்றிணைக்க முற்படவில்லை. _ இது அதற்குரிய தளமும் அல்ல. இடது, வலது என்று பிளவுபட்டிருக்கும் உலகத்தில் இடதினை நோக்கிய ஆழமான தேடலில்

www.tamilrangam.net

அத்தகைய மனவுணர்வுள்ளவர்களை இணைத்துத் தேட முற்படுகிறோம், அவ்வளவுதான்.

எனவே சமூகப் பிரக்ஞையுள்ளவர்களே! உங்கள் சந்தேகப் பார்வைகளைக் களைந்துவிட்டு வாருங்கள். தேடலை மேலும் தெறிப்படுத்து–வோம். தேடலுடன் கருத்து ஒன்றிப் போகவில்லையென்றால் இன்னொரு கோணத்தில் நீங்களும் தேடுங்கள். நூறு பூக்கள்...... ஆயிரம் கருத்துக்கள் என்ற அடிப்படையில் அவற்றை உளமார வரவேற்கிறோம்.

புரட்சிக்காரனாகவோ, சோசலிசத்தை ஆதரிப்பவனாகவோ, பொதுவுடமையாளனாகவோ ஒருவன் இருந்தால் மட்டும் போதாது. ஒவ்வொரு குறிப்பிட்ட சமயத்திலும் எந்த ஒரு குறிப்பிட்ட இணைப்புக் கண்ணியைப் பிடித்துக் கொண்டால், சங்கிலி முழுவதையும் பிடித்துக் கொள்ளவும் அடுத்த இணைப்பிற்கு உறுதியாக முன்னேற நிலைமையைப் பக்குவப்படுத்தவும் முடியுமோ அந்த இணைப்பைக் கண்டு பிடிக்கவும் அவனுக்குத் தெரிய வேண்டும்.

– லெனின் –

## அட்டைப்படம்

சுரண்டும் வர்க்கத்திற்கு எதிராக பேரணியாய் பேரலையாய் ஆர்த்தெழுந்த தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர மேதின எழுச்சியை நினைவுகூரும் முகமாக......

www.tamilrangam.net

# வாழ்வும் கலையும்

- சந்தியன் -

ஒவ்வொரு ஒன்று பின்னிப் பிணைந்து, ஒன்றின் மேம்பாட்டோடு மற்றையது மேம்பாடு அடையும் கலையும்-வாழ்வும். மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை மனித சமுதாயத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரை, பிரிக்கப்பட முடியாத ஒன்றாகும்.

மனித உணர்வுகளின், மனித வாழ்வியலின் ஒழுங்கான வெளிப்பாடு கலையென்பதனால் தான், அம் மனிதசமுதாயத்தின் தோற்றத்தோடு இன்று வரை நிலைத்திருந்து நாளைய மாறுதலோடு மாறப்போகின்றது, அல்லது நாளைய மாறுதலின் உந்துசக்தியின் ஒன்றாக இது விளங்குகின்றது.

சமூகவடிவங்களோடு மாறுகின்ற கலையானது புலன்களின் உணர்வுகளோடும் விஞ்ஞான தொழில்நுட்பத்தோடும் பலவிதமான பரிமாணங்களை எட்டுகின்றது.

## கலையின் தோற்றமும் வரலாறும்

ஆதியில் மனிதன் வேட்டையாடிய போது, உணவு தேடியபோது, தேடியது கிடைத்த போது அடைந்த ஆனந்தத்தில் ஆடினான். தான் கண்ட ஒன்றை உருவகப்படுத்திச் சொல்லிய பொழுது அங்க அசைவுகளுக்கு உட்பட்டான், அல்லது அங்கங்களை அசைவுக்கு உட்படுத்தினான். இதுவே கூத்தாகவும், தானஅமைப்புகள் மாறிய போது நாடகமாகவும் மாறியது.

புதிதாகக் கண்டதொன்றை மற்றவர்களுக்கு சொல்லி விளங்கவைக்க முடியாத போது அதனைக்கோடு கிழித்துக் காட்டினான். அதுவே ஓவியமானது. ஓவியத்தின் இருபரிமாண, முப்பரிமாண செதுக்கல்கள் சிற்பக்கலையானது.

இயற்கை சப்தஜாலங்களில் மனிதனும் கலந்த போது இசை உருவாகியது. தான் சொல்லவந்ததை எழுதிய போது எழுத்துக்கலை உருவாகியது. இசையின் தேடுதல் விஞ்ஞான அறிவோடும் இசைக்கருவிகள் தோன்றியது. எழுத்துக்கலையின் உள்ளடக்க வித்தியாசத்திலும், எழுத்தின் பரிமாண வளர்ச்சியிலும், கவிதை-உரைநடை-கட்டுரை-சிறுகதை-குறுநாவல்-நாவல் போன்ற இலக்கிய வடிவங்கள் பிறந்தன. இவைகள் விஞ்ஞான சாதனமான கமராவோடு இணையும் போது சினிமாவானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

## கலையும் காலமும்

கலையின் உள்ளடக்கம் காலத்தை சுட்டிக்காட்டுபவையாகவும், தனிமனித, குழுவின், சமூகத்தின் உணர்வுகளை அத்தோடு அது படைக்கப்படும் சமுதாயத்தின் தன்மையையும் வெளிப்படுத்துபவையாகவும் பெரும்பாலும் இருக்கின்றன.

## கலை எங்கே போகிறது?

கலையானது இன்றைய நிலையில் எதை நோக்கி இயங்கிக் கொண்டிருக்கிறது? மாறுபட்ட சமுதாய வாழ்நிலைகளும் உலகமெங்கும் பரவிக்கிடக்கையில், கலையின் உள்ளடக்கம் சமூக மேம்பாட்டை பிரதிபலிக்கிறதா என்ற கேள்வி சிந்திக்கும் ஒவ்வொரு மனிதனிடமும் ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

இரண்டு வர்க்கங்களாக பிரிவுண்டு கிடக்கும் எமது சமுதாய அமைப்புமுறையை தகர்ப்பதற்கு எப்படி கலை பயன்படுகின்றது என்பதுதான் இப்பொழுது எங்கள் முன்நிற்கும் வினா.

## கலையும் கலைஞர்களும்.

படைப்பாளிகள், கலைஞர்கள், தவிர்க்கமுடியாதபடி அந்தந்த சமூகத்தின் பிரதிநிதிகள். நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ எங்களது அநேக கலைகள் தொழிலாக மாறி விட்டது. அந்தக்கலையே கலைஞனின் வாழ்க்கையின் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் நிலையில் கலைஞன் வாழ்கிறான்.

ஆகவே கலைஞன் தவிர்க்கமுடியாதபடி தற்நிலைக்கு ஏற்ப பொருளாதாரத்தால் கட்டுப்போடப்பட்டு இருக்கிறான்.

அந்த கட்டு அவன் ஜீவனை இறுக்குவதால் அவன் தன் வாழ் நிலைக்கு கட்டுப்படுகிறான். ஆகையால் அவன் தன் பொருளாதாரத்தைப்போலவும் தன் குடும்ப வாழ்நிலையைப்போலவும் தான் விரும்பியோ, விரும்பாமலோ பணமுள்ளவர்களிடமும் நிலப்பிரபுகளிடமும், முதலாளிகளிடமும், வர்க்க அமைப்பை பேண முயலும் அரசிடமும் கட்டுப்படுகிறான்.

இதனை சுரண்டும் வர்க்கத்தினர் லாவகமாக கையாளுகின்றனர். வர்க்க அமைப்புகளைப்பேணக்கூடிய, அரசைக் காப்பாற்றக்கூடிய, பாலியல் விவகாரங்களைத் தூண்டக்கூடிய, தனிமனித வன்முறைகளை வளர்க்கக்கூடிய கலைப்படைப்புகளை உருவாக்க தூண்டுகிறார்கள்.

பாலியல், வாழ்வியல் தான் ஆயினும் அதுவே அறிவுக்கு மீறிய உணர்ச்சியாக மாறும்போது சிறப்படைந்த மனித இயல்பு நிலையிலிருந்து மிருக நிலைக்கு மனிதனைக்கொண்டு செல்கிறது.

இவ்வளவையும் மீறி அறிவினால் மனித நேசத்தினால் மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்ற நிலைப்பாட்டினால் சுரண்டப்படுவோரின் வேதனைகளை அவர்கள் சமூக மாற்றத்தை மனிதனை அடக்கும் ஒவ்வொரு அடக்கு முறையையும் சுட்டிக்காட்டும் கலைஞனின் படைப்புகள் காலத்திற்கு காலம் வந்து கொண்டு இருக்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

இப்படியான கலைஞர்களின் கலைபடைப்புகள் சமூகமாற்றத்திற்கு உந்து சக்தியாகவும் அமைந்து வருகின்றது.

இப்படியான கலைப்படைப்புகள் தமிழில் இருக்கின்றன. ஆயினும் அவை போதாது என்று துணிந்து சொல்லலாம். பல விதமான கலைவடிவங்கள் பழமையைத் தாக்கிப்பிடிக்கும் நிலையில் இன்னும் இருக்கின்றது என்பதே வேதனைக்குரியது.

கலைஞர்களின் பொருளாதார கட்டுப்பாடும், புகழாசையும், அளவுக்கு மிஞ்சிய பொருளாசையும், அவர்களைக்கட்டிப்போடுவதனால் கண்டும் காணாத மாதிரி சமூகத்தை அராம்தீ படைப்புகளை வெளியிட்டாலும் முடிவுகளை சமூகநகர்வை மறைப்பதாகவும் அல்லது மழுங்கடிப்பதாகவும் அவை அமைந்து விடுகின்றன.

கலைப்படைப்புகளால் மட்டும் சமூகத்தை மாற்றமுடியாததான் எனினும் சமூகத்தின் பிரச்சனை இதுதான் என்று எடுத்துக்காட்டி அதற்கான காரணத்தையும் தீர்வையும் புரியவைக்க முயற்சியால் முடியும்.

காலங்காலமாக தொடர்ந்து வரும் மூடநம்பிக்கைகளையும், மதங்களின் போலித்தன்மையையும் எங்களின் அதாவது தமிழர்களின் கல்தோன்றி மண்தோன்றா முத்ததமிழ்க்குடியின் சிறப்பிடித்த,, மக்கிப்போன பழக்கங்களை வெட்டி எறிவதற்கும் நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ சமுதாய கலாச்சார பண்பாடுகளை அழித்து உடைத்து ஒரு சமூகமாற்றத்திற்காக மக்களை இட்டுச்செல்லக்கூடிய கலைப்படைப்புகளை தமிழ்மொழிக்கும் மனிதகுலத்திற்கும் தரவேண்டியது எங்கள் சமகால கலைஞர்களின் சமூகக்கடமையாகும்.

தமிழ்ப்பண்பாடு என்று கருதாமல் மனிதப்பண்பாடு என்று சிந்திக்கும் நிலை தமிழ்க்கலைஞர்களுக்கு தேவையான ஒன்றாக இருக்கின்றது.

நாம் சாதாரண மன உணர்வுக்கு இடம் அளித்து விட்டாலோ; அன்றி நிலைமை நிதானமாக எடை போட்டுப் பார்க்காமல் சிவப்புக் கொடிகளை அசைப்பதற்கு இடம் கொடுத்து விட்டாலோ, அன்றி ஆதாரமற்ற போலித்தனமான புரட்சிகர வாய்ச்சவடாலினால் ஈர்க்கப்பட்டு அதிதீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டாலோ; நாம் சீர் படுத்த முடியாத தவறுகளை செய்து விடுவோம் என்பதை மறந்து விடக் கூடாது.

— லெனின் —

www.tamilrangam.net

# நடைச் சித்திரம்
# நம் நாட்டுப் பாத்திரம்

— வித்தக பண்டிதர் —

இந்த ஆளை, எங்கோ, எப்பவோ, கண்ட ஞாபகம். நாலுகட்டுப் பிட்டோடு மூன்று பரப்புக்காணி வாங்கி வெகு புழுகத்தோடு உறுதி எழுதுவித்த கமக்காரர் கலாசூதபின்னை கடைக்கு வந்து போகிறவர்மாதிரியும் தெரியுது.

சரியாக 'மட்டுக்கட்ட ' ஏலாமல் கிடக்கு.

கறைபாளி அரித்த முட்டிக்கூவந்தடி சாடை தேகம் உப்பி எலும்புக் கூடாகக் கிடக்கிறது. காகக் கூட்டம் கிளம்பத் கலைந்த தடி. ஒரு நாள் முழுக்க மினக்கெட்டுவிருவிருடி எடுத்தாலும் ஒரு சிறங்கை சதை தேறுது. இருவில்ல கோது நெஞ்சு.

பார்த்த நேரக்குருத்தி, 'ஐயோ பாவம், கிழவி, என்ன சவத்துக்கு இந்தாள் என் கண்ணில் பட்டார்?' என்றிருக்கிறது.

பேனாவைத் தூக்கி நிறுத்தி வைத்துக்கொண்டு, கன்னத்தில் கை வைத்து எதையோ பறிகொடுத்தவர் போல் கருஞ் சிந்தனையிலாழ்ந்தவராட்டம், நெற்றிப் புடங்கைச் சாடையாகச் சுருக்கிக் 'கமராவுக்குப். போஸ்'' கொடுக்கிற 'மகத்தான எழுத்தாளர்' பாணியில் பாவனை பண்ணி, வெறும் பேயாட்டம் கண்களை மூடி, நினைவைச் சொடுக்கி விட்ட பிறகுதான், இந்தாளை இன்னார் என்று இனங்காண முடிந்தது.

'அட கோதாரி, இவர் எங்கட ஆனைக்கோட்டை விழுக்கள் சரவணமுத்தன்னை. இந்தாளின்ர கோலம் என்ன?

ஒரு காலம் — அதாகப்பட்டது, சேர, சோழ, பாண்டியர் ஒழுக்காக ஒற்றுமை குலைந்து, வடிவாக அடிக்காள் மல்லுக்கட்டின பொற்காலம், அது. இந்திய, இலங்கை என்னை நாசி வீடு மாதிரியிருந்த அந்தக்காலம், 'வண்டுருட்டி, கன்னிகா, பரமேஸ்வரி சினிமா'. மேனாச் 'செற்'றுகளை, தற்காலச் சினிமாச் சீட்டுக்களை இறக்குமதிசெய்து 'மகத்தான கலை வளர்க்கும்' நமது [illegible]களாட்டம் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து, விண்ணர் மடுவத்திலும், நாடகக் கொட்டகைகளிலும், கோயில் திருவிழாக்களிலும் லட்சக்கணக்கான விசிலடிச்சான் குஞ்சுகளை உற்பத்திபண்ணி, யாழ்ப்பாணத்தை ஒரு கலக்குக் கலக்கியவர், இந்த விழுக்கள் சரவணமுத்தனின்.

ஒப்பார ஒறனை மீசை வைத்து, ஒழுங்கைகள் தோறும் உள்ள படலைகள் திறந்து, பெண்புரசுகளிடம் சுகம் விசாரிப்பதில் ஒரு 'குடப்' பேர்வழி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

சங்கீத ஞானமும் சண்டித்தனமும் அவருடன் ஒட்டிப் பிறவாத இரட்டைக் குழவிகள்.

அம்மனூர் நாமகமேடைத் திலகம் புத்துவாட்டி சோமுவே இவரைக் கண்டால் வேலியோரம் ஒதுங்குவார்.

கில்லாடிவல்லிபுரம், பங்கடை சிறிசேகு, சுந்தர்மடக்கனகராசன், சிலம்படி சின்னத்தம்பி, பண்டாரக்குளத்தடி முத்தன் என்பவரெல்லாம் பெரும் பிரசித்திபெற்ற சண்டியர்கள். இவரின் அக்காலக்கூட்டாளிகள்.

வில்லுக்கத்தி, கிறீஸ், வாள், சீனடிசிலம்படி விளையாட்டுக்களிலும் சுமாரான பரிட்சயம் உண்டு.

சமய பக்தியும் நிறைய உண்டு. அனுடம் வேத ஆகமக்கொண்டகாறன்

நெற்றியில் மூன்று விரல் தொட்டுக் கீறிய விபூதி. புருவ மையத்தில் அரைச்சுத வட்டமான சந்தனப்பொட்டு, தெடநீலக் சேட், சேலம் பட்டு வேட்டி, விசிறி மடிப்பில் சருகைச் சால்வை, காலில் ஒரு சோடி எருமை வார்ச் செருப்பு, கை விரலில் பச்சைக் கல்பதித்த கனாவளை மோதிரம், கழுத்திலிருந்து வண்டிவரை நெஞ்சிலே உருளுகிற இரட்டைப்பட்டு வெந்தயச் செயின், கைக் குவளையில் 'எவ்பன் கிரேட் ரின்''.

வெள்ளி, செவ்வாய் விரதகாறர். புழுத்த சைவம். 'மச்ச மாமிசம் கண்ணில் காட்டக்கூடாது'' என்று தமாஷாகச் சொல்லிக்கொள்வதில், ஒரு புறுகம். மீன், முட்டை, இறைச்சி இல்லாமல் சோறு இறங்காது. சனி நீராடி மாட்டு இறைச்சியோடு உணவு கொள்ளாவிடில்பொச்சம் அடங்காது. உறக்கமும் கொள்ளார். 'இதெல்லாம் அயலட்டைக்குத் தெரியாது' என்று இவர் நினைப்பு.

'வெட்டிரும்பு' என்ற நவீன கசிப்புப் பூதங்கள் ஆட் கொல்லிகளாக ஊர்களுக்குள் படையெடுக்கமுந்திய அந்தப் புனித தானங்களை இந்தியாவில் தந்தெடுத்து யாழ்ப்பாணத்திலும் அறிமுகப்படுத்திய பெருமை இவருக்குண்டு.

தாலிகட்டிக் கலியாணம் செய்தவ இருக்க, கடவுளேயென்று இவருக்கு இந்தியாவிலும் இலங்கையிலும் 'வைப்பாட்டி'களுக்குப் பஞ்சம் ஏற்பட்டதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

காமன் கூத்தாடுவதில் பழமும் தின்று கொட்டையும் போட்டவராதலால், 'ரேக்ய ரஉநபுஷி சுவாமியார் இவரிடம் ஞான தீட்சைபெறலாம்' என்று வெறும் பேயனும் துணிந்து சொல்லலாம்.

என்ன சவமோ தெரியவில்லை, அரசியல் இவருக்குத் தண்ணிபடி. அதுவும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஆசீர்வாதத்தோடு பாகிஸ்தானைப் பிரித்துப் புண்ணிய கிருத்தியம் செய்த ஜின்னா பாணிஇவருக்கு வாலாயம்.

'மார்க்ஸியம்' என்றாலே கை ஓட்டிச் சத்தி எடுப்பார். 'வெடி குண்டைவிழுங்கிச் செத்தாலும் மார்க்ஸியம் படிக்கக்கூடாது' என்பது இவர் வேதாந்தம். "கம்யூனிசத்தை மும்முரமாக எதிர்க்காவிட்டால் நரக பாதாளத்துக்குப் போக நேரிடும்' என்ற பயம் இவருக்குண்டு.

ஜப்பான் குண்டு போட்ட கையோடு அடித்த அரசியல் காற்றலை இந்தியாவுக்கூடாக இலங்கையில் வீசிய வாக்கில் வழங்கிய சுதந்திரம்இவருக்கு வாய்ப்பாயிற்று.

சிலம்புச் செல்வர் சிவஞானக்கிராமணியரிடம் பிச்சை கேட்டாரோ. 'அடைந்தால் திராவிட நாடு, அன்றேல் சுடுகாடு' என்ற அடுக்கு மொழி வீரர். அண்ணாத்துரை, தமிழுக்காகக் கழுத்தறுபடத் தண்டவாளம் பல கண்ட கருணாநிதி ஆகியோரின் எட்டணாப் புத்தகப் பட்டியலைப் பாடம் பண்ணிய தோசமோ என்னமோ, தீந்தமிழ்க் காவலர்களாம் நம் தேசத்து வீரசாகசப் பத்திரிகைகள் ராசதுரையைச் 'சொல்லின் செல்வர்' என்று விளாசித்தள்ளவே, இவரும் வலு புளுகத்தோடு அந்தப் பிரசாரத்தையே வாகாகத் தனக்குப் பயன் படுத்திக் கொண்டவர்.

இந்திய சுதந்திரச் சிற்பியான காந்தி, முருக்கங்காய்மென்ற சாடை கம்யூனிசவாடை அடிக்கிற நேருவோடு சேர்ந்து இந்தியாவையே காந்திவிட்டார்' என்று நாளும் பொழுதும் 'தக்கல்' புனைவதில் பக்காப் பேர்வழி.

ஜின்னா பாணியில் ஒரு பொன்னுரை உருவாக்க, 'பாகிஸ்தான் ஜின்னா யாழ்ப்பாணப் பொன்னா' என்று ஜீ.ஜீ க்காக யாழ் வீதிதோறும் கத்திக் களைத்துப்போன இவர். இறுதியாக, 'அடைந்தால் தமிழரசு அன்றேல் பிணமரசு' என்றும், 'துப்பாக்கிக்குண்டு விளையாடும் பந்து' என்றும் ராசதுரை பாணியில் முழங்கிச் சங்கநாதம் புரிந்தார்.

www.tamilrangam.net

சங்கிலி அரசன் இறக்கும்போது கோட்டை கொத்தளம் சகிதம் தன் உறைவாளை இவரிடமே நம்பிக் கொடுத்துவிட்டதாக இவருக்கு எப்பவுமே ஓர் எண்ணம்.

இந்தியக் கடல் ஆமை வாய்க்குள் அடித் திணித்து இலங்கைக்குச் சோக்காகக் கடத்தி வந்த 'யாவாரம்' பண்ணிப் 'பெரும்புள்ளி' யான சீமான் கவட்டை அப்படியே காப்பி அடிக்கிற மோக தோஷம், இன்றைய நவீன கலை மேதைகளான நமது ஆக்களுக்குப் பிடித்துவிட்டதால், வாய்விடாச்சாதியான ஆமைகளுக்குப் பதிலாக வாய் திறந்து வசனம் பேசுகின்ற— பாடுகின்ற சினிமாச் சிட்டுக்களை நவீனப்படுத்துவதில் கலை வளர்கிறதோ என்னவோ, 'பணம் பெருகிறது' என்னும் யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ளமுடியாத முட்டாள்கள், இவருக்குச் சிம்ம சொப்பனம்.

'கற்க கசடற கல்லாதன கற்றபின் நிற்க அதற்குத் தக' என்ற புதுக்குறளால் வள்ளுவனையே மொக்கனாக்கிய பெருமைக்குரியவர்கள் இவரின் அத்தியந்த நண்பர்கள்.

உலகின் தலைவிதியையே மாற்றிய ரஷ்ய ஒக்டோபர் சோஷலிசப் புரட்சியை, 'ஆகாவென்றெழுந்தது பார் ஜெகப்புரட்சி' என்று பாரதி வாழ்த்திப் பாடியதால், 'பாரதி கவிதைகளைக் கட்டைவிறகு நெருப்புத் தணலில் எரித்துச் சாம்பலாக்க வேண்டும்' என்று சன்னதமாடியவர்களுக்கு ஆங்காங்கே மேடைகள் அமைத்துக் கொடுத்த புண்ணியம் இவரைச் சாரும்.


வாக்கில் ஒன்றும், நாக்கில் இன்னொன்றும், நோக்கில் பின்னொன்றும் போக்கில் வேறொன்றுமென, வளை பிடிவாத இலட்சியப்பற்றோடு, நேர்மை பிறழாத சத்திய வந்தராய் வாழ்கிற மகா புத்திசாலிகளான மேதைகளை 'அரிச்சந்திரகூட்டம் தங்கமான மனுசர்' என்று புகழ்ந்து பாடித்திரிகிறதே, இவருக்கு ஊதியமற்ற பகுதி நேர வேலை. 'களவெடு பொய் சொல்லாதே, பொய் சொன்னாலும், பொருந்தச் சொல்லு' என்ற நம்முன்னோர்களின் தமிழ் வாசகத்தின் பொன் மொழிகளே இவரின் அன்றாட வாய்ப்பாடு.

ஹிட்லர், முசோலினி, ரோஜோ ஆகிய மும்மூர்த்திகள் புண்ணியத்தால் இரண்டாம் உலக மகா யுத்தம் தொடங்கிய சூட்டோடு, 'யுத்த — மார்க்கட்'டில் தானும் 'எழும்பிக் கொடி பறக்கலாம்' என்றஇவர் ஆசையில், ரஷ்ய செஞ்சேனைப் படைகளால் முறியடிக்கப்பட்டுஹிட்லர் மறைந்த காலந் தொட்டு இவருக்குப்பிடித்த சனியன், 'ஊர் குழம்பினால் உடையாருக்குத் தாயம்' என்ற மந்திரத்தை இடம்பொ-

www.tamilrangam.net

ருள் எவர் அறிந்த முதலில் அவரை வல்லவராக்கிவிட்டிருக்கிறது.

இவ்வாறெல்லாம் கியாதி வாய்ந்த வீரர்கள் சரவணமுத்தனை, 'இவ்வளவு கறுக்கல் பிச்சாண்டிபோல் இந்தக் கோலத்திற்கு ஏன் ஆனாரு?' என்பதுதான் மரக்கட்டையான என் மண்டையில் தப்பரவாகப் பிடிபடவில்லை. உங்கள் புத்திக்கு எட்டினால் சொல்லுங்கள்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# உருவம்

அன்றைய பொழுதெரிந்து
அடங்கத் தொடங்கிய
வேளைதனில்...
அவன் விழிகளில்
நின்று ததும்பிய கண்ணீர்
முகத்தின் மீது
துளி துளியாக
சரிந்த சிதறிக் கொண்டிருக்க
அவன் விழிகள் தீப்பிழம்பாக
அச்சூரியனுக்கு
ஒளியூட்டிக் கொண்டிருந்தது -

அன்று
கசிந்துப் போன
சூரியனின் செங்கதிர்கள்
பச்சையிலைகளில்
அந்த வர்ணத்தை
பொழிந்துக் கொண்டிருந்தது -

இது தான்
அவன் விழிகளில்
தெரிந்த தீட்சண்யம் -

அவை தான்
எதிர்காலத்தை அவனுக்குணர்த்திய
அந்த வர்ணத்தின் மீது
சிறிய கம்பிகளை
நட்சத்திரங்கள் -
அதன் பின்னும் ஜொலித்திடும்
திமிறிச் சொல்லவியலாத விதத்தில்
சில மணித்தியாலத்தில் நின்றும்
வெள்ளிக்கையிடையே
நட்சத்திரங்கள்
பிரகாசிக்கப் போகின்றன....

இரவி -

www.tamilrangam.net

# ஈழத்தில்..... ஏகாதிபத்திய அபாயம் ③

எஸ் இளங்கோவன்

'நிலைமை இன்று எப்படி மாறிவிட்டது! ஐரோப்பாவில் இருந்து நடைபெற்ற இந்தக்குடிபெயற்றந்தான் வட அமெரிக்காவை பிரமாண்ட அளவிலான விவசாய பொருள் உற்பத்திக்கு தயார் செய்தது. இப்போது இந்த அமெரிக்க விவ-சாயப்பொருளுற்பத்தியின் போட்டி ஐரோப்பாவின் சிறிதும் பெரிதுமான நில உடைமைகளை அடித்தளத்திலேயே ஆட்டிக்குலைக்கின்றது. அதோடு இந்தக் குடிபெயற்றம் இதகாரம் மேற்கு ஐரோப்பாவும் முக்கியமாய் இங்கிலாந்தும் தொழிற்றுறையில் வகித்து வரும் ஏகபோக நிலை சீக்கிரமே தகர்க்கப்படுமளவுக்கும்படி அத்தனை விறுவிறுப்போடும் அவ்வளவு பெரிய அளவிலும்--அமெரிக்க ஐக்கிய நாடு தனது அளவிலாத் தொழிற்றுறைச் செல்வாதாரங்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கு சாத்தியமாக்கிறது. (க; க; அ-தமிழில்; 25)

இங்கிலாந்தின் ஏகபோக நிலை தகர்க்கப்பட்டு விடும்.......... என்று கூறப்படுவதை வாசகர்கள் கவனிக்கவும். 'தகர்க்கப்படுதல்' என்ற சொற்பதம் எங்கே இடத்திலே எழுகின்றது என்றால் — அது உலகச்சந்தையில்தான் என்பதை உணரமுடிகின்றது. இந்தத் தகர்ப்பு ஒரு யுத்தத்தின்மூலந்தான் தீர்க்கப்படும் என்று மார்க்கஸ்-எங்கெல்கஸ் கூறாமல் விட்டார்கள் என்று கருதுபவர்கள் சித்தாந்தக் குருடர்களாகத்தான் இருக்கமுடியும். ஆனால் அந்த ஆய்வின் முக்கியத்துவம் அன்றைய வரலாற்று அவசியமாக இருக்கவில்லை.

சரி...... எது எப்படியிருந்தாலும்...... ஆக்கிரமிப்பு எந்த வகைப்பட்டிருந்தாலும் உலகத்தில் ஏகபோகங்களின் கூறுபடல் எவ்வளவு மூர்க்கமாக இருந்தாலும் அடிப்படையென்பது ஒவ்வொரு நாடும் இயந்திர மயமாக்கப்படுகின்றன என்பதுதான் உண்மை. ஒவ்வொரு நாட்டிலும் தேசிய இயக்கங்கள் (ஏகபோக ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகளில்) வளர்ந்து வருகின்றன என்பதுதான் வெளிப்படை உண்மை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

நாம் ரொட்ஸ்கியவாதிகளின் கருத்து நிலையில் இருந்து (பொதுவான உண்மையும் கூட) உலகம் ஏகாதிபத்தியத்தினால் சிக்கித் தவிக்கப்பட்டுள்ளது என்று கொள்வோம். ஆயினும்கூட, சமுதாய வளர்ச்சி சம்பந்தமான அடிப்படை அலகுகளிலும் அந்த ஏங்கல்ஸ் கூறுவதாவது:

> 'ஒவ்வொரு தேசத்திற்கும் தன்னாட்சியையும் ஐக்கியத்தையும் மீட்டளிக்காமல் பாட்டாளி வர்க்க சர்வதேச ஒற்றுமையை உண்டாக்குவதோ, பொது நோக்கங்களுக்காக இந்தத் தேசங்களிடையே சமாதான வழிப்பட்ட அறிவார்ந்த ஒத்துழைப்பை ஏற்படுத்துவதோ முடியாத காரியம்'

(க: க: அ: இத்தாலியப்பதிப்புக்கான முன்னுரை 1893 தமிழில் பக்; 38)

பார்த்தீர்களா வாசகர்களே! இங்கே ஏங்கல்ஸ் 'மீட்டளித்தல்' என்ற சொல்லுக்கு தனி அர்த்தம் சொல்லுகிறார். அக்காலகட்டத்தில் இத்தாலி, ஹங்கேரி, ஜெர்மனியின் சுதந்திரத்தைப்பற்றிய விமர்சனத்தில்தான் இதனைக் குறிப்பிடுகிறார். அ-து ஒரு நாடு இன்னொரு நாட்டின்மீது சமூக, பொருளாதார அரசியல் கலாச்சார மேலாதிக்கம் செலுத்தும் (நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ) போக்கு அகற்றப்படாமல் சர்வதேச பாட்டாளி வர்க்க ஒற்றுமையைப்பெறுவது சாத்தியமேயல்ல என்று இக்கருத்தை வரலாறு ஒன்றும் அழித்து ஒதுக்கிவிடவில்லை.

எனினும் இது இயக்கவியல்தன்மை வாய்ந்தது. ரொட்சியத்தின் ஆதரவாளர்கள் இயக்கத்தை, வளர்ச்சியை துண்டு துண்டாகப்பார்ப்பவர்கள். ரொக்சியின் கொள்கைக்கு ஆதரவுதேடிய போல்சிவிக்கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினர் புகாரினை அவருடைய நிலைகுறித்த வருணிக்கையில் — இயக்கவியல், சுதம்பவாதப்போக்கில் நின்று இயக்கத்தை துண்டு துண்டாக நோக்கி ரொட்சிக்கு ஆதரவு தேடுகிறார் புகாரின் என்றார் லெனின்.

எனவே நாம் ஒன்றை அழுத்தமாகச்சொல்லுவோம். அதாவது 'ரொட்சியம் இயக்கவியலை தன் ஆய்வுக்கான பிரதான அலகாக கொள்ளாதது' என்பதே.

பிரபஞ்சத்தில் அனைத்துமே இயக்கவியல் விதிகளின் கீழேயே இயங்கிக்கொண்டிருக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

ரொட்சியவாதிகளின் கருத்துக்கள் முற்றுமுழுதாக இயக்கவியலை நிர்மாணிப்பவனும் மனிதன்தான் எனப்பொருள்தருவதாகத் தென்படுகின்றது. இதனைத்தான் எங்கல்ஸ்—

> "இயக்கவியல் விதிகளை இயற்கையில் நிர்மாணிப்பது என்ற பிரச்சனையே இல்லை, மாறாக அவற்றை இயற்கையில் கண்டறிவதும் அதில் இருந்து முறையாக வெளிப்படுத்துவதுமே தேவை."

என்று எழுதினார். [டூரிங்கிற்கு மறுப்பு' தமிழில் பக்: 23]

இவ்வாறாக இயக்கவியல் விதிகள் 'இயற்கை—சமூகம்—சிந்தனை' ஆகியவற்றின் வளர்ச்சியில் தனது முழுமையையும் புரிகின்றது. மனித குலத்தின் நீண்ட நெடுங்கால வரலாற்றுப் பிணைப்பின் உள்ளடக்கத்தை, அதன் இயங்கு சக்தியைப் புரிந்து கொள்வதற்கு மார்க்ஸ், எங்கல்ஸுக்கு முன் ஆயிரமாயிரம் அறிஞர்கள் முயன்றனர். ஆனால் கண்டது தோல்வி. ஆனால் இந்த உள்ளடக்கத்தை கண்டுபிடித்த முதன்மேதை காரல்மார்க்ஸ்தான். அவர் இயக்கவியல் பொருள்முதல்வாதத்தைக் கண்டுபிடித்து அதனை வரலாற்றுத் துறையில் பிரயோகிப்பதன்மூலமே மனித குல வரலாற்றை, அதன் இயக்க உள்ளடக்கத்தை அக்குவேறு—ஆணிவேறாக கண்டுபிடித்து வெளிப்படுத்தினார். மனித குல வரலாற்றின் இச்சிக்கல்நிறைந்த பெரும் குழப்பத்தைத் தகர்த்து அதனைத் தெளிவமாகவும், அதன் வளர்ச்சியின் மையக்கோட்பாட்டைச் சுற்றிப் படர்ந்தும் —அதன் (வரலாற்று வளர்ச்சியின்) கருப்பொருளை வெளிப்படுத்தினார்.

அந்த முடிவுகளின் படியும், அதனைத்திருப்பிக்கும் மெய்யான பார்வைகளின்படியும் வரலாறானது தனக்கேஉரிய புறநிலை விதிகளுடன் வளர்ந்து கொண்டிருக்கின்றது.

ரொட்க்சிய வாதிகளில் சிலர் (அதன் தத்துவார்த்தப்பிரச்சனைகளில் சிறு கொள்ளளவு உடையவர்கள்) அகநிலை—புறநிலை என்று ஒன்று முன்னிலையென்று சிறுபிள்ளைத்தனமாகப்பேசுகின்றார்கள். ரொட்சியவாதிகளின் முதியவர்கள், புரட்சிக்குவேண்டிய புறநிலைகள் எல்லாம் முதிர்ச்சியடைந்துவிட்டன, இப்போது அகநிலையில் ஒரு 'சர்வதேசக்கட்சிதான்' உலகப்புரட்சியை முன்னெடுப்பதற்குத்தேவையென்கின்றார்கள். அவர்கள் ஏகாதிபத்தியம் எல்லா நாடுகளிலும் முதலாளித்துவ அமைப்பை நிறுவியுள்ளது என்கின்றார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

இது குழந்தை வடிவில் உள்ள முதலாளித்துவத்திற்கும் —சாகும் தறுவாயில் உள்ள முதலாளித்துவத்திற்கும்— ஏகபோக முதலாளித்துவத்திற்கும்— இடையில் இருக்கிற பாரிய வேறுபாடுகளை வகைபிரித்துக்காட்டவில்லை.

றொட்சிய வாதிகளின் கொள்கைகளைப்பார்த்தால், உலகில் உள்ள நாடுகள் அனைத்தும் வரலாற்றின்—அதன் வளர்ச்சியில் ஒத்த சமமான கட்டத்தில் இருக்கிறதென்று பொருள்கொள்ளவே தோன்றுகின்றது. ஆனால் சோசலிசத்தைக்கட்டுவதற்கான புரட்சி நடத்துவதற்கு குறித்த ஒரு வரலாற்றுக்கட்டத்தில் ஒவ்வொரு நாடும் இருக்கவேண்டும். அது இன்றியமையாத தேவை. ஏனெனில் புரட்சி தனக்கே உரிய சமூக இயல்போடு வளர்கிறது. அது நடப்பதற்கு ஒரு கட்டம் அவசியம். ஆனால் இவற்றையெல்லாம் தமது தத்துவ நிரலில் புறக்கணித்துவிட்ட றொட்சிய வாதிகள் எவ்வாறு தங்கள் நிரந்தரப்புரட்சியெனும் ஆகாசக்கோட்டையை பிடிக்கப்போகிறார்களோ தெரியவில்லை.

தொடரும்.....

# இலட்சியப் பெண்

— வித்தியா

மழையிலும் வெயிலிலும்
மாடாக உழைக்கிற
மலையகப் பெண் நான்

வேகுகிற வெயிலிலும்
சுடுகிற நெருப்பிலும்
கைகளுக்கு உறைகளின்றி
கண்ணாடி தொழிற்சாலையில்
தொழில் புரியும் பெண்நான்

உணர்வுகளை மழுங்கடித்து
மாறாத பெருமூச்சுடன்
இயந்திரமாய்,
இயந்திரங்களுடன்
தினம் தினம் போராடும் பெண்நான்

வீட்டினிலே
ஆண்களின் கட்டுப்பாட்டினை மீறி
தெருவினிலே
ஆண்களின் பகிடிக்கு முகங்கொடாது
முதலாளித்துவ கரங்களுக்கெதிராக
நீண்ட போராட்டம் நிகழ்த்தும்
புதுமைப் பெண்நான்.

ஒடுக்கு முறைகளுக்கு எதிராக
போர்க்கொடி தூக்கி
என்றுமே உறுதியாக
உண்மையாக உழைத்திடும்
இலட்சியப் பெண் நான்

என்னுள் தான்
உண்மையான
விடுதலையை
வென்றெடுக்க முடியும்

நான்
என்றுமே
புத்திஜீவிகளின்
மட்டமான பட்டியலில்
அகப்படமாட்டேன்
ஏனெனில்
நான் எப்போதுமே சுதந்திரமானவள்.

www.tamilrangam.net

# பூகோளத்தின் மேற்பரப்பில்

தொகுப்பு: சூர்யன்

## பாலஸ்தீனத்தில் இஸ்ரேலின் வெறியாட்டங்கள் தொடர்கின்றன.

கடந்த 17 மாதங்களாக எழுச்சியுடன் தொடர்ந்துவரும் பாலஸ்தீனத்தின் 'மக்கள் கிளர்ச்சி'யை எதிர்கொள்ள முடியாத இஸ்ரேலிய அரசு, தான் ஆக்கிரமித்துள்ள மேற்குக்கரைப் பகுதியில் இராணுவ அடக்குமுறையை அதிகரித்து வருகிறது. கடந்த சில வாரங்களாகவூரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கும் காஸா பிரதேசத்திலுள்ள ரஃபா அகதிகள் முகாம் பகுதியில் 4 பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலியர்களின் துப்பாக்கிகளுக்கு பலியானதுடன் 15பேர் படுகாயமடைந்துள்ளனர். இதேபோலவே ஜபாலியா அகதிகள் முகாமில் இன்னுமொரு பாலஸ்தீனிய பிரஜை கொல்லப்பட்டுள்ளார்.

மேற்படி பாலஸ்தீன மக்களின் போராட்டத்தை நசுக்க அநேக வழிகளை விதித்துவந்த அரசு இப்போது இஸ்ரேலின் எல்லைக்குள் வேலை செய்து வந்த பாலஸ்தீன தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்து அவர்கள் இஸ்ரேலில் வேலை செய்வதற்கு தடைவிதித்தும் உள்ளது. இதுவரை 490 பாலஸ்தீனியர்கள் பலியாகியுள்ளனர். இதில் 20 இஸ்ரேலிய இராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

### சீனு

## கோர்பச்சேவின் சீன விஜயத்தை தொடர்ந்து சோவியத்–சீன உறவுகளில் புதிய திருப்பம்

கடந்த 30 ஆண்டுகளாக சீர்குலைந்திருந்த சீன–சோவியத் யூனியன் ஆகிய நாடுகளுக்கிடையிலான உறவுகளில் புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. சோவியத் தலைவரான கோர்பச்சேவின் சீன விஜயத்தையடுத்தே இத்திருப்பம் நிகழ்ந்தது. கடந்த 30 ஆண்டுகளில் சீனாவுக்கு விஜயம் செய்த முதல் சோவியத் தலைவர் கோர்பச்சேவ் ஆகும்.

தமது விஜயத்தின் போது சீனாவின் சகல உயர் தலைவர்களையும் சந்தித்த கோர்பச்சேவ் சீன–சோவியத் ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டார். சோவியத்தின் எல்லைப்பிரதேசத்திலிருந்து சோவியத் படைகளை விலக்கிக் கொள்ளல், சீனாவுக்கு தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான உதவிகளை வழங்கல் மற்றும் கலாச்சாரப் பரிமாற்றம் ஆகியவையும் இவ்வொப்பந்தத்தில் அடங்குகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த கோர்பச்சேவின் சீன விஜயம் சீன மாணவர்களது போராட்டத்தினால் முக்கியத்துவம் குறைக்கப்பட்டுவிட்டது. கோர்பச்சேவை முன்னோடியாகக் கொண்டு சீனாவிலும் அரசியல் மாற்றங்கள் நிகழ்த்தப்பட வேண்டும் என்று கோரி சீன மாணவர்கள்நடத்தும் போராட்டங்கள் குறித்து கோர்பச்சேவ் வெளிப்படையாகஅபிப்பிராயம் கூறாதபோதும் அவற்றை மறைமுகமாக வரவேற்றுள்ளார். அதே சமயம் தனது நாட்டில் தற்போது பரிசோதனையில் உள்ள 'பெரஸ்தைரெய்கா' முறையை உடனடியாக சோவியத் யூனியனின் எந்த நாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## எதியோப்பிய அரசை கவிழ்க்கும் முயற்சி முறியடிக்கப்பட்டது

ஜனாதிபதி மென்ஜிஸ்தோ கெய்லே மரியத்தின் தலைமையிலான எதியோப்பிய அரசைக் கவிழ்க்க முயன்ற சதிமுயற்சியொன்று முறியடிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மென்ஜிஸ்தோ கிழக்கு ஜேர்மனிக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தபோது இக்கவிழ்ப்பு முயற்சி நடைபெற்றது. இதனை தலைமை தாங்கி நடத்திய ஜெனரல் டெமிசி கொல்லப்பட்டதுடன் கைத்தொழில் அமைச்சரான பஃரா கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## பனாமாவில் தேர்தல் வன்முறைகள்.

பனாமாவில் நடைபெற்ற ஜனாதிபதித்தேர்தல்கள் ஊழல் நிறைந்ததாக வர்ணிக்கப்படுகிறது. தேர்தல் முடிந்து பல நாட்களாகியும்இதுவரை தேர்தல் குறித்த சரியான முடிவுகள் அறிவிக்கப்படவில்லை. பனாமா இராணுவ ஆட்சியாளர் நோரிஜியாவின் வேட்பாளர் தோல்வியடைந்துள்ளதாகவும் எதிர்க்கட்சியான மக்கள் ஜனநாயகக் கட்டணிக் கட்சியினரே வெற்றியடைந்துள்ளதாகவும் சுதந்திரமான தேர்தல் அவதானக் குழுக்களும்., பனாமாவின் கத்தோலிக்க திருச்சபையும் கூறுகின்றன. ஆனால் இருதரப்பினருமே தேர்தலில் தாமே வெற்றியடைந்ததாகக் கூறிவருகின்றனர். தேர்தலை தொடர்ந்து நாடு முழுவதும்பலத்த வன்செயல்கள் நோரிஜியாவின் ஆதரவாளர்களால் தூண்டிவிடப்பட்டுள்ளன.

அதே சமயம் பனாமாவில் ஏற்பட்டுவரும் குழப்பநிலைகளை தனக்குசாதகமாகப் பாவிப்பதற்கு அமெரிக்கா பனாமாவிலுள்ள தனது தளத்திற்கு மேலும் 3000க்கும் அதிகமான இராணுவத்தையும்,ஆயுதங்களையும் அனுப்பியுள்ளது. அமெரிக்காவின் இந்த ஆக்கிரமிப்பு முயற்சியை சகல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

இலத்தீன் ' அமெரிக்க நாடுகளும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

00 இத்தாலியப் பிரதமரான திரு. டி மிற்றா தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்ததையடுத்து கடந்த 13 மாத காலமாக பதவியிலிருந்த இத்தாலிய ஆட்சி கவிழும் நிலைக்கு வந்துள்ளது. உலகப் போரின் பின் இத்தாலியில் அமைந்த 48வது அரசாங்கமாகும் இது.

00 கடந்த வருடம் யூலை மாமாதத்தில் வளைகுடாப் பகுதியில் அமெரிக்காவினால் ஈரானிய பயணிகள் விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதும் அதில் பயணம் செய்த 290 பேர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. இந்த இழப்புக்கான நட்ட ஈட்டைக் கோரி ஈரான் அமெரிக்காவுக்கெதிரான வழக்கொன்றை உலக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

00 பாகிஸ்தான், சவூதி அரேபியா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகள் வழங்கிய ஆயுதங்கள் மற்றும் பாகிஸ்தானிய இராணுவத்தின் துணையுடன் ஆப்கானிஸ்தானின் கேந்திர நகரான ஜலாலாபாத்தைக் கைப்பற்றுவதற்காக கடந்த இரு மாதங்களாக ஆப்கானிஸ்தானின் கிளர்ச்சியாளர்கள் நடத்திவரும் முயற்சி இதுவரை வெற்றியளிக்கவில்லை. சோவியத் படைகள் வெளியேறிய பின் ஆப்கானின் அரச படைகள் எதிர்பாராத அளவு உக்கிரத்துடன் இப்பிரதேசத்தில் போராடி வருகிறது.

00 22 நாடுகளைக் கொண்ட அரபு நாடுகளின் குழுவில் எகிப்து மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. 1979ம் ஆண்டில் எகிப்து இஸ்ரேலுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டதையடுத்து அரபு நாடுகளின் கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தது.

00 நியூக்கலிடோனியாவின் கனக் மக்களின் தலைவரான திரு. ஜீன் மரி ஜிபோ கனக் தீவிரவாதியால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து FLANK இன் புதிய தலைவராக திரு. பிரான்சுவா பேர்க் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் ஒரு முன்னாள் மதகுருவார்.

00 ஆர்ஜென்ரைனாவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியான திரு. அல்போன்சின் தோல்வியடைந்துள்ளார். பெரோனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த திரு. மெனெம் 49% வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்துள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இலங்கைச் செய்திகள்

• சிறிலங்கா அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் கொழும்பில் தொடர்கின்றன. பேச்சுவார்த்தைகளில் இதுவரை தமிழ்ப்பகுதிகளில் அந்நிய இராணுவத்தால் நிகழ்த்தப்பட்ட மனித உரிமைமீறல்கள் பற்றியே பெரிதும் பேசப்பட்டதாகவும் முக்கிய விடயங்கள் பற்றி இன்னும் பேசப்படவில்லை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. பேச்சுவார்த்தைகள் நீண்டகாலம் தொடரலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

• விடுதலைப் புலிகளைத் திருப்திப்படுத்தும் வகையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட வட-கிழக்கு மாகாணசபையை சிறிலங்கா அரசகலைத்தால் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மீண்டும் ஆயுதங்களை கையிலெடுத்து ஈழத்துக்கான போராட்டத்தை தொடரும் என்றுஅதன் செயலதிபர் க.பத்மநாபா அறிவித்துள்ளார்.

• ஜே.வி.பி தலைவர் ரோகண விஜேவீரா சுகவீனமுற்றிருப்பதாக வந்த செய்தி பொய்யானதென்றும். எக்காரணம் கொண்டும் ஜே.வி.பி சிறிலங்கா அரசோடு பேச்சுவார்த்தை நிகழ்த்தாது என்றும் ஜே.வி.பி அறிவித்துள்ளது.

• யாழ். அரசாங்க அதிபர் திரு.பஞ்சலிங்கம் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். யாழ். கோவில் வீதியில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. மேற்படி வீதியில்வைத்தே முரசொலி பத்திரிகை ஆசிரியர் திரு.திருச்செல்வத்தின் மகனும் யாழ்.பரியோவான் கல்லூரி மாணவனுமான 17 வயதுடைய அகிலன் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். யாழ். பல்கலைக்கழக மாணவன் பிரபாகரன், தெல்லிப்பழையில் யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் இராமநாதன், நெல்லியடியில் சட்டத்தரணியும், [illegible] பாடசாலை அதிபருமான திரு.வ.மகாலிங்கம் ஆகியோரும் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

www.tamilrangam.net

0 யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இந்திய அரசால் வழங்கப்பட்ட பஸ்வண்டிகள் இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. அதேசமயம் இந்திய இராணுவத்துடன் தொடர்பு வைத்திருப்பவர்கள் கொல்லப்படுவர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

0 யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை ஆகிய இடங்களில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மேதினக் கூட்டங்கள் நடைபெற்றன. ஈழப்புரட்சியமைப்பு மலையகத்தில் நடத்தியது.

0 கல்முனை, அக்கரைபா, தற்போது சம்மாந்துறை ஆகிய இடங்களிலேற்பட்ட தமிழ்—முஸ்லீம் மக்களுக்கிடையிலான மோதல்களுக்கு சிறிலங்கா அரசின் சதியே காரணம் என நம்பப்படுகிறது.

0 வெலிஓயா குடியேற்றத் திட்டத்தை நிறுத்துமாறும், வடக்கு— கிழக்கு இணைப்புக்கான வாக்கெடுப்பை இரத்துச்செய்யுமாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) தனது மேதின அறிக்கையில் கோரியுள்ளது.

0 தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர் திரு. சிறீசபாரத்தினத்தின் முதலாவது வருட நினைவு தினம் தமிழ்ப்பகுதிகளில் அனுஷ்டிக்கப்பட்டது.

0 யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர்கள் எழுந்தமான முறையில் கைதாகுதல், சித்திரவதைக்குள்ளாக்கப்படல், கொலை செய்யப்படு-தல் ஆகியவற்றைக் கண்டித்து வகுப்புக்களை பகிஷ்கரித்துப் போராட்டம் நடத்தியுள்ளனர்.

0 புத்திஜீவிகளையும், கல்விமான்களையும், சமூகத் தொண்டர்களையும், கொலை செய்யும் கொலைஞர்களின் நடவடிக்கைகளுக்கெதிராக மக்கள் அணிதிரள வேண்டும் என்று வட—கிழக்கு மாகாணசபை முதல்வர் திரு. வரதராஜப் பெருமாள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net



# சீனப் பெருஞ்சுவரை தகர்க்கும் மாணவர் போராட்டம் - சூர்யன்

உலகின் வல்லரசு நாடொன்றின் சகலவல்லமையும் வாய்ந்த அரசையே ஆட்டங்காண வைக்கும் மாபெரும் மாணவர் போராட்டமொன்று இன்று நமது அறிவுப் புலனின் எல்லைக்குள் நடந்து கொண்டிருக்கிறது. இன்று உலகின் அனைத்துச் செய்தித்தாபனங்களின் கண்கள் மட்டுமல்ல போராட்டங்களின் பால் ஈடுபாடுகொண்டவர்களின் புலன்களும் கூட சீனாவையே கவனித்துக் கொண்டிருக்கின்றன.

கடந்த ஏப்பிரல் மாதம் 17ம் திகதி பீகிங் நகரிலுள்ள சீனாவின் வரலாற்றுப் புகழ் வாய்ந்த 'தியென் அன் மென்' சதுக்கத்தில் 4000 பேர் கூடி 'அதிக ஜனநாயகம்' கோரி ஆர்ப்பாட்டம் நிகழ்த்தியபோதும் யாருமே எதிர்பார்க்கவில்லை இந்த மாணவர் போராட்டம் இப்படி விசுவரூபம் எடுக்கும் என்று. இன்று பெரிய எழுத்துக்களில் சீனா பற்றிய முன்பக்கச் செய்திகளை வெளியிடும் பத்திரிகைகளில் கூட இச்செய்தி, ஒரு மூலைச் செய்தியாகவே வந்தது. ஆனால் இரண்டு நாட்களின் பின் அதாவது ஏப்பிரல் 20ம் திகதி இச்சதுக்கத்தில் 'அதிக சுதந்திரம்' 'அதிக ஜனநாயகம்' கோரி ஆர்ப்பாட்டம் செய்தவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சமாகிவிட்டது. மெல்ல மெல்ல உலகின் கண்கள் சீனாவின் பக்கம் திரும்ப ஆரம்பித்துவிட்டது.

ஏப்பிரல் 21ம் திகதி இரண்டு இலட்சம் மாணவர்கள் சீனாவின் மக்கள் சதுக்கத்தில் அதிக ஜனநாயகம் கோரி நடத்திய போராட்டம் உலக அரங்கில் அதிர்ச்சியைக் கொடுத்தது. இதே சமயத்தில் தான் சீன மக்களாலும், மாணவர்களாலும் சீர்திருத்தவாதியாகக் கருதப்பட்டவரும், சீனாவின் பிரதமராகவிருந்து தற்போதைய சீன அரசிலும் பதவிநீக்கம் செய்யப்பட்டவருமான ஹு யா பாங்கின் மரணமும் இறுதி நிகழ்ச்சிகளும் மாணவர் போராட்டத்தை உந்தும் நிகழ்வுகளாகின. இதன்போது மாணவர்கள் பொலிசாரின் தடைகளை மீறி ஆவேசத்துடன் ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்தனர். இதிலே மாணவருக்கும் பொலிசாருக்கும் ஏற்பட்ட மோதலில் 130க்கும் மேற்பட்ட பொலிசார் காயமடைந்தனர்.

ஏப்பிரல் 24ம் திகதி பீகிங்கின் மாணவர்கள் 'அடக்குமுறை அரசாங்கத்துக்கு' எதிராக உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பிப்பதாக அறிவித்தனர். ஆரம்பநிலைதனில் 100 மாணவர்கள் உண்ணாவிரதப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

போராட்டத்தை ஆரம்பித்தனர். ஏப்ரல் 27ம் திகதி 5 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களும் மாணவர்களும் தடைகளையும் மீறி பீஜிங்கில் அணிதிரண்டனர். மே 14ம் திகதி 3இலட்சம் மாணவர்களுடன் பத்திரிகை நிருபர்களும் இணைந்து 'அதிக உரிமைகள்' கோரும் ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்தனர். மே 13ம் திகதி 1000 மாணவர்கள் உண்ணாவிரதப்போராட்டத்தை மேற்கொண்டனர்.

மே 12 இல் வரலாற்றுப் புகழ் வாய்ந்த சோவியத் தலைவர் கோர்ப்பச்சேவின் சீன விஜயத்தின் முக்கியத்துவத்தையும் மீறி 3 இலட்சத்துக்கு மேற்பட்ட சீன மாணவர்கள் தமது அதிக ஜனநாயகம் கோரும் போராட்டத்தை தொடர்ந்தனர். இவர்கள் தமது போராட்டப் பாதைகளில் கோர்பச்சேவின் உருவப்படங்களைத் தாங்கியதும் 'பெரஸ்தெரெய்கா', 'கிளாஸ்நோஸ்ட்' போன்ற அரசியல் மாற்றங்கள் சீனாவிலும் கொண்டுவரப்படவேண்டும் என்றும் கோரினர்.

மே 16இல் இலட்சக்கணக்கான மாணவர்களுடன் ஆசிரியர்கள் மற்றும் பல நகரங்களிலுமிருந்து தொழிலாளர்கள், விவசாயிகள் இணைந்துகொண்டனர். உண்ணாவிரதமிருந்த மாணவர்களின் எண்ணிக்கை மூவாயிரமாகியது அவர்களது உடல் நிலையும் கவலைக்குரியதாகியது. அதேசமயம் மாணவர் போராட்டத்தின் உக்கிரம் கோர்பச்சேவ் கலந்துகொள்ளும்நிகழ்ச்சிகளை மாற்றியமைக்க வேண்டிய நிலைக்கு சீன அரசைத்தள்ளியது.

மே 17 – போராட்டங்கள் உக்கிரமடைந்து கொண்டிருக்கின்றன. நாடே ஆவேசமடைந்துவிட்டது. ஆனால் சீன அரசோ தொடர்ந்துமிந்த மாணவர்களின் போராட்டத்தை அலட்சியப்படுத்தியது. வளைந்துகொடுக்க மறுத்தது. மாணவர்களால் மதிக்கப்பட்ட ஒரேயொரு தலைவர் சாவோ ஸியாங் உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடுமாறு மாணவர்களிடத்தில் தோன்றி கண்ணீர் மல்க வேண்டுகோள் விடுத்தார். ஆனால் மாணவர்கள் இவ்வேண்டுகோளை ஏற்க மறுத்துவிட்டனர்.

மே 18ம் திகதியே சீன அரசு நீண்ட தன்னுடைய தூக்கத்தைக் கலைத்தது. நிலைமை பீஜிங்கில் மட்டுமல்ல முழு சீனாவிலுமே மோசமடைந்துவிட்டது என்று பிரதமர் லீ பெங் அறிவித்தார். அதே சமயம் நாடு முழுவதும் அரசுக்கெதிரான கோசங்களுடன் 10 இலட்சம் பேர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். இதே தினத்தில் இப்போராட்டம் அரசியல் ரீதியான கோசங்களுடன் குமுறியது. செயல்திறனற்றபிரதமர் லீ பதவி விலகவேண்டும் என்றும் 84 வயதான சீனத் தலைவர் டெங் ஸியோபிங் ஓய்வு பெறவேண்டும் என்றும் மாணவர் கோரினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

மாணவர்களது கோரிக்கையை சீன அரசு ஏற்கவில்லை. பேச்சுவார்த்தைக்கு அழைக்கவில்லை. மாறாக பிரதமர் லீ இராணுவச் சட்டத்தை பிரகடனப்படுத்தினார். மக்கள் பொது இடங்களில் கூடக்கூடாது என்று தடைவிதித்தார். பீஜிங்கில் இலட்சக்கணக்காக கூடியிருக்கும் மக்களை அப்புறப்படுத்தும்படி இராணுவத்திற்கு உத்தரவிட்டார்.

ஆனால் உறுதியுடன் போராட்டத்தை முன்னெடுத்த மக்களை நெருங்க சீன இராணுவத்தால் முடியவில்லை. பீஜிங்கை இராணுவம் நெருங்கமுடியாதபடி வீதித்தடைகளை, மக்கள் பஸ்கள் மற்றும் ட்ரக் வாகனங்களின் துணையுடன் ஏற்படுத்தினர். அதுமாத்திரமல்ல சீனாவின் மக்கள் இராணுவம் மக்களைக் கொல்லாது என்ற கோசங்களையும் சுலோகித்தனர்.

அதேசமயம் மறுபுறம் சீனாவின் மக்கள் இராணுவத்தினர் அரசின் உத்தரவை ஏற்க மறுத்தனர். மக்களுக்கெதிராக மக்கள் இராணுவத்தின் துப்பாக்கிகள் திருப்பப்படக்கூடாது என்று 100 இராணுவ உயரதிகாரிகள் கையெழுத்திட்ட கடிதம் சீனப் பிரதமருக்கு அனுப்பப்பட்டது. இராணுவச் சட்டம் தன்னுடைய இயலாமையை ஒத்துக்கொண்டது. அரசாங்கம் மூச்சுத்திணறுகிறது.

இந்த நிமிடம் வரை சீன அரசு இப்போராட்டம் தொடர்பாக சரியான அணுகுமுறை எதையும் எடுக்கவில்லை. மாறாக தொடர்ந்தும் தவறுகளையே இழைத்துவருகிறது. மக்களின் ஆதரவைப் பெற்ற ஒரே தலைவரான கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர்நாயகமான சாவோ சியாங்கின் பதவிகளைப் பறித்துள்ளது. போராட்டம் பற்றிய தகவல்கள் பத்திரிகைகளில் வரக்கூடாது என்று தடைவிதித்திருக்கிறது.

ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்று நினைக்காமல் அதிக ஜனநாயகம் அதிக உரிமைகள் இவற்றைக் கோரி போராட்டம் நடத்தும் சீனமாணவர்களது போராட்ட நோக்கு அரசின் தற்போதைய நடவடிக்கைகளால் வேறுதிசையில் மாறுவது தவிர்க்கமுடியாது.

அதேசமயம் ஆயுதங்களால் நடத்தப்படும் போராட்டங்களை விட ஆவேசம் கொண்ட மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்கள் வலிமையானவை என்பதற்கு இன்றைய சீனா இன்னுமொரு உதாரணம்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# வருக! வருக

ஊசி தட்டி
புத்தகங்களை
அடைத்துவைத்திருக்கிறன்,
தோழர்களே! வருக!
வீதிபார்த்த முகப்பில்
ஜன்னல்களைத்
திறந்துவைத்தபடி
மேசைமீது அழகழகாக
பல வர்ண அட்டைகளோடு கூடிய
புத்தகங்களை,
பேப்பர்களை...
இன்னுமென்ன
வருக! வருக!!
பேசுவோம்
அறிவைப் பெருக்குவதற்காகவா
நூல்களை,
அது அறிவில்
குறைந்தவர்களுக்குத்தானே,
நாங்கள்
அனைத்தும் அறிந்தவர்களல்லவா,
எங்கள் புலமையின்
மேதாவிலாசத்தை
பறைசாற்றிக் கொள்வதற்காக
பேசுவோம்,
அரசியல்
தத்துவம்
பொருளாதாரம்
கலை
இலக்கியம்
விஞ்ஞானம்

இன்னும் இன்னும்...
என்னவெல்லாம் இருக்கின்றதோ
அனைத்தையும் பேசுவோம்
அன்றொருநாள் —
'பியர்' கிளாசை ஏந்திய
விரல் இடுக்குகளில்
புகைந்துகொண்டிருந்த
சிகரெட்டை ஊதி இழுத்துவிட்டு
ஊர விழக்கில்
ஏதோவொரு பிரதேசத்தில்
தண்ணீர்ப்பஞ்சத்தால்
தவித்துச்செத்தவர்கள் பற்றியும்,
பின்னொரு நாளில்
'அகதிக்காட்' கிடைத்த நண்பனின்
பிரமாதமான பார்ட்டி ஒன்றில்
'புரியாணியையும் அவித்த முட்டையையும்'
ஒரு கை பார்த்தவாறு,
மேற்குவங்காளத்து உணவுப் பஞ்சத்தில்
பட்டினியால் செத்தவர்களை
புள்ளிவிபரத்தோடு
கணக்கெடுத்ததும்,
இன்னுமொருநாள் —
சகோதரிக்குப் பார்த்த
இஞ்சினியர் மாப்பிள்ளைக்கு
சீதனத்துக்காக
ஐம்பதினாயிரத்தை
தபால் கந்தோர் ஊடாக அனுப்பிவிட்டு
காலாற நடந்துவரும்போது...
சீதனக்கொடுமையால்

www.tamilrangam.net

# தோழர்களே!!

வட இந்தியாவில்
திருட்டிக் கொல்லப்பட்ட
பெண்களைப் பற்றியும்,
யாழ்ப்பாணத்தில்
சீதனம் இல்லாமல்
முதிர்ந்து கொண்டிருக்கும்
கன்னியர்களைப் பற்றியும்,
கவலையோடு
விரிவாக கதைத்ததும்
யாருக்குவரும் இந்த சமூக பிரக்ஞை?
குடும்பமாக இங்கு
குடியேறிவிட்ட பின்னரும்
தேசத்தை மறந்துவிடாமல்
மக்களுக்கு ஓய்வு தேவையில்லை
அவர்கள் போராட வேண்டுமென்று
கதைத்ததும்.....
யாருக்குவரும் இந்த சித்தாந்த அறிவு?
"வறுமையிலுள்ளவர்களுக்கு
சாப்பாடு போடுவதே பிழை
அது அவர்களது போராட்ட உணர்வையே
மழுங்கடித்துவிடும்" என்று
மார்க்சையும், லெனினையும்
சாட்சிக்கு இழுத்துவந்து
நீங்கள் கதைத்தபோது
"அப்படியானால்
உங்கள் குடும்பத்துக்காக மாத்திரம்
ஏன் நீங்கள் உழைக்கிறீர்கள்
அவர்களுக்கு போராட்ட உணர்வு
வரக்கூடாதா?"...
என்று
மடத்தனமாக நான் குறுக்கிட்டதும்
அதற்கு நீங்கள் தந்த
"தத்துவ விளக்கங்கள்"
அப்பப்பா.....
எத்தனை பெரிய அறிவு ஜீவிகள் நீங்கள்!!
"நாட்டிலை இருந்து என்னத்தை
செய்து கிழிக்கிறீர்கள் —
எம்மைப்போல
அறிவான விசயங்களையா பேசுகிறீர்கள்?"
நாம்
பேசுவோம்
நிறையப் பேசுவோம்
தத்துவம்
அரசியல்
கலை
இலக்கியம்
இன்னும் இன்னும்....
புத்தகமும்
அருந்த நல்ல பானமும்
இங்கும்
எல்லாமிருக்கிறது
தோழர்களே வருக! வருக!!

— அருந்ததி —

www.tamilrangam.net

# மு. தளையசிங்கமும் மாக்ஸியமும்

— சி. சிவசேகரம்

(முதலாவது இதழின் தொடர்ச்சி:)

பழைய இந்துமரபின் சாதிப் பிரிவுகள் எந்த அடிப்படையில் நிறுவப்பட்டன என்பதற்குரிய பூரண விளக்கங்கள் இது வரை காட்டப்படவில்லை. ஆனால் உண்மையில் பழைய நான்கு வர்ணங்களும் சமூகத்தின் அளவில் மனிதன் இலகுவாகக் குணங்களைக் கடந்து வளர்வதற்கு வகுக்கப்பட்ட பிரிவுகள்தான். தனிப்பட்ட மனிதன் தன்னளவில் குணங்களைக் கடந்து வாழ்வதற்கு நான்கு ஆச்சிரமங்கள் இருந்தன. பிரமச்சரியம், கிரகஸ்தம், வனப்பிரஸ்தம், சந்நியாசம். அதேபோல் சமூகளவில் பரிணாம முன்னேற்றத்திற்காக எடுக்கப்பட்ட பிரிவுகள் தான் பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திர வருணங்களாம்.

''முழு உயிரினங்களதும் வளர்ச்சியை விஞ்ஞானரீதியாகக் கணக்கெடுத்து அந்தக் கணக்கெடுப்புக்கு ஏற்ப மனித பரிணாமத்தைச் சத்திய உச்சத்தை நோக்கித் துரிதப்படுத்தி வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்டவையே அந்த ஆச்சிரம - வர்ணப் பாகுபாடுகளாகும். மறுபிறப்புக் கொள்கையோடு அவை பொருத்தப்பட்டு ''தத்துவம் அசி'' என்கிற இலட்சிய நிலையைச் சதா முன் வைத்து சமூக இயக்கமே பிரமிக்கும் வகையில் ஆற்றுப்படுத்தப் பட்டிருக்கிறது'' (மெ. 46—47).

(பண்டைய இந்திய வரலாற்றைப் புரிந்துகொள்ள எத்தனையோ இந்திய வரலாற்றியல் ஆய்வாளர்கள் தம் காலத்தை விரயமாக்கி விட்டார்கள். தளையசிங்கம் பாய்ச்சும் ஒளியில் 6000 வருஷ வரலாறு தம் கண் முன் ஒளிர்கிறது! மூடர்களே உங்கள் புத்தகங்களை எல்லாம் தூரப்போடுங்கள்! இதோ, வரலாறுகட்கெல்லாம் முடிவுகட்டும் வரலாறு வந்து விட்டது!)

அடியேனுக்கு ஒரு சிறு சந்தேகம்: இந்தத் தத்துவ விளக்கங்கள் மூலம் தீர்க்கமுடியாத சிக்கல்கள் பல மகாபாரதம் போன்ற நூல்களிலும் உள்ளனவே! பிராமணப் பரசுராமர் அரச குலத்தவர் மீது கொண்ட சினமும் கர்ணனை அவர் சபித்ததும் ஏன்? கர்ணன் அர்ஜுனனை எதிர்த்துப் போட்டியில் கலந்து கொள்ள முனைந்தபோது கர்ணன் மன்னர் குலத்தவனா என்ற கேள்வி எழுந்தது ஏன்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

மகா மேதையான பிராமணர் உதங்கர் புலையனாக வந்த இந்திரனை அடையாளம் காணமுடியாமல் அவன் வழங்கிய நீரை மறுத்தது ஏன்? என்றுமே சாதிகள் பிறப்பாலானவை என்பதை மூடிமறைக்க முனைந்த எத்தனையோ பேரின் வரிசையில் மு. த. வும் மூடங்கிவிட்டார் என்றே தோன்றுகிறது. வரலாற்றை நேர்மையாகப் பார்க்கத் தைரியமில்லாதவர்களால் அதை உருவாக்கி வழிகாட்ட முடியாது. இந்த வகையான கோழைத்தனம் எப்படிச் சத்திய யுகத்துக்கு வழி காட்டுமோ தெரியவில்லை.

வர்ணாசிரம தர்மத்தை அதன் வரலாற்றுச் சூழலில் மிக அனுதாபமாகவே நோக்க முடியும்; அதற்கான மார்க்கம் சாதி முறைக்கும் உற்பத்தி உறவுகட்கும் சமுதாயத் தொழிற் பிரிவுகட்கும் உள்ள தொடர்பை அறிவதேயொழியத் தத்துவக் குழப்பத்தில் உண்மைகளை அமுக்கி மறைப்பதல்ல.

(வியற்னாம்) "யுத்தத்தில் அமெரிக்கா நேரடியாக ஈடுபட்டும் கூட அதனால் வெல்ல முடியவில்லை என்பது எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு தூரம் கொறியா யுத்தத்தில்போல் சீனா அதில் நேரடியாக ஈடுபடவில்லை என்பதும் முக்கியமானதாகும். சீனாவும் ரஷ்யாவும் அதில் நேரடியாகத் தம் படைகளை இறக்கிவிட்டால் அதன்மூலம் தமக்கு ஆபத்து ஏற்படும் என்று கருதின என்பது அதன்மூலம் புலனாகிறது. '' இது ஒரு ஸ்தம்பித நிலையாகும், (மெ. 117).

எனவே, ரஷ்யாவும் சரி, சீனாவும்சரி, முதலாளித்துவ நாடுகளுடன் உடனிருந்து வாழும் சமாதானத்தை இன்றைய தேவைக்குரிய தந்திரமாக ஏற்றுக்கொள்கின்றன. அதன்மூலம் அதற்குரிய ஸ்தம்பிதத்தையும் நேரடியாகப் போர்தொடுக்க முடியாத பலவீனத்தையும் ஒப்புக்கொள்கின்றன.'' (மெ., ப. 118)

சீனா கொரிய யுத்தத்தில் ஈடுபட சீனாமீது அமெரிக்க அத்துமீறல்களே காரணமாயிருந்தன. மற்றப்படி லெனின் முதல் மாஓ வரை எந்த மாக்ஸியவாதியுமே (ட்ரொட்ஸ்கியவாதிகள் போக) நாடுகள்மீதான யுத்தத்தின்மூலம் சோஷலிஸத்தைப் பரப்பும் கருத்தை முன்வைத்ததில்லை. மு. த. வின் விளக்கங்களெல்லாம் எங்கேயிருந்து வருகின்றன என்று வாசகர்களே ஊகித்துக்கொள்ளலாம்.

"எல்லைச் சண்டை காரணமாக (புசிறிநதி எல்லை) சீனாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே எழுந்துள்ள பிரசாரப் போரில் திரும்பவும் அந்த இன, மொழிப் பற்றுக்கள் இருபக்கங்களிலும் படையாகத் திரட்டப்படுவதைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது.'' (போ., ப. 77)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilrangam.net

இனப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று என்பன அப்படியே கெட்ட விஷயங்களல்ல. அவற்றுக்கும் ஒரு முற்போக்கான பங்குள்ளது. அது வரலாற்று வளர்ச்சியின் போக்கில் நிர்ணயமாவது. இவற்றை இனவெறி, மொழிவெறி, தேசியவெறி என்பனவற்றுடன் குழப்பிக்கொண்ட மு. த. எந்த அடிப்படையில் சீனாமீது மேற்கூறிய குற்றச்சாட்டை வைக்கிறார்? வுஸுலி நதி எல்லைப் பிரச்சனை மட்டுமன்றி முழு சீன - ரஷ்ய எல்லைப் பிரச்சனை தொடர்பாகவும் சீனாவின் நிலைப்பாட்டை மு. த. எப்போதாவது படித்திருக்கிறாரா? மு.த. வின் தகவல்கள் கைலாசபதி கூறியதுபோல என்கௌண்ட்டர் போன்ற பத்திரிகைகளினின்றுதான் (பெருமளவுக்கேனும்) கிடைத்ததாகச் சந்தேகிக்க இடமில்லையா?

“எகலின் தத்துவத்தை வெல்வதற்கு எங்கல்ஸ் எப்படி வழி கூறினாரோ அப்படித்தான் மாக்ஸியத்தையும் வெல்லவேண்டும். அதன் நன்மைகளைக் கறந்துகொண்டு அதன் உருவத்தை அழிக்க வேண்டும். இன்னுமொரு பெருந் தத்துவத்தால் அதைச்சிதைக்க வேண்டும், சங்கரரின் அத்துவைத வேதாந்தமும் அந்த வகையிலேயே பௌத்தத்தை இந்தியாவில் வென்றிற்று.'' (போ.79)

இவர் மாக்ஸியத்தை வெல்கிறதும் சிதைக்கிறதும் ஒருபுறம் கிடக்கட்டும். பௌத்தம் இந்தியாவில் தோற்றது ஒருவெறும் தத்துவப் போராட்டத்தின் தோல்வியா? தேருவாத பௌத்தம் தன்னை ஜனரஞ்சகப்படுத்தியதன்மூலம் இலங்கையிலும் வேறுஞ் சில நாடுகளிலும் பிழைத்திருக்கிறதே! அதுஎந்தத் தத்துவவளர்ச்சியின் வெற்றி? அத்வைதம் ஏன் இந்தியா முழுவதும் ஆதிக்கத்திற்கு வரமுடியவில்லை. ஏன் அதனால் இந்திய எல்லைக்கு வெளியே போக முடியவில்லை. இந்த மாதிரி ஒற்றை வசன விளக்கங்களும் வியாக்கியானங்களும் வரலாறுபற்றி மு. த. வின் கருத்துக்குழப்பத்துக்குப் பல இடங்களிலும் சான்று கூறுகின்றன.

தொடரும்



www.tamilrangam.net

சிறுகதை

# வேலை



— கோவை ஜநகன் —

அவன் செயின் நதியின் பாலமொன்றின் மேலே விரக்தியுடன் வேலை தேடுவதற்காய் நடந்து கொண்டிருந்தான். பாலத்தின் கரையில் நின்று கீழே ஓடும் நதியை கவனித்தான். நதி எவ்வளவு அமைதியாய், நிதானமாய் ஓடிக்கொண்டிருக்கிறது! ஏன்தான் என் வாழ்வில் இன்னும் அமைதியும், சந்தோசமும் ஏற்படவில்லை. சீ....எந்த மனிதனுக்குத்தான் வாழ்வில் சந்தோசமேற்பட்டது, நிம்மதி ஏற்பட்டது. அவன் தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

அவன் பாரிசிற்கு வந்து அடுத்த மாதத்துடன் இரண்டு வருடம் முடிகிறது. சொந்த நாட்டிலிருந்து அகதியாய் வந்தவர்களில் இவனும் ஒருவன். கல்வியில் உயர்தரம் படித்து பல்கலைக் கழகம்செல்வதற்கு தகுதிபோதாமையால் வேலை தேடிக் கொண்டிருந்தவன் வெளிநாட்டு மோகத்தில், நாட்டை விட்டு வெளியேறிவிட்டான். இப்போது அவன் மூன்று வேலைகள் இங்கு வந்ததின் பின் செய்து பிரச்சனைப்பட்டு விலகியோ, அல்லது விலக்கப்பட்டோ புதிய வேலைக்காய் குளிரில் வெடவெடத்துப் போன முகத்துடன் வீதிகளில் அலைந்து கொண்டிருக்கின்றான்.

ஏற்கனவே இங்கு வந்திருந்த அவனது ஊர் சிநேகிதன் ஒருவன் அவன் வந்த மூன்று மாதத்திலேயே அவனுக்கு வேலை எடுத்துக் கொடுத்துவிட்டான். அவனது வேலை பெரிய பொருட்காட்சி அரங்கில் துப்பரவாக்கும் வேலை. வேலைக்கு புதிதாய் ஆட்களை எடுப்பதால், நிறைய தமிழர்கள் அலுவலகத்துக்கு வெளியில் கட்டமாய் நின்றனர். இவனும், இவனைப் போன்ற இன்னும் சிலரும் முன்கூட்டியே வேலைக்குப் பதிவு செய்தபடியால் இவர்களை முதலாளி அழைத்து பெயர்களை பதிவு செய்து கொண்டான். வேலைதேடி வந்த மற்றவர்களை பார்த்து வேலை இல்லை என்று முதலாளி சொல்லியும் கேட்காமல் நின்றனர். முதலாளி தனது அல்சேசன் நாயை இவர்களின் மேல் ஏவிவிட்டான். நாய் வேலை தேடிவந்தவர்களை துரத்த அனைவரும் கலைந்தனர். முதலாளி இந்த வேடிக்கையை பார்த்து புன் முறுவலுடன் வேலை செய்பவர்களுக்குரிய துடைப்பங்களை கொடுத்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

அவனோடு இன்னும் அறுபது பேர்மட்டில் தமிழர்கள். ஒவ்வொரு பத்து பேராய் ஒவ்வொருகுழு. அதற்கு ஓர் தலைவன். முதலாளி ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு பகுதியை காட்டினார். முதலாளி அல்சேசன் நாயுடன் வித், வித் (கெதியாய், கெதியாய்) என கூறியபடி அரங்கத்தை சுற்றிவருவார். அனைவரது துடைப்பங்களும் விரைவாக இயங்கவேண்டும். கை ஓயக்கூடாது. கை ஓய்ந்தால்வேலை தொலைந்தது. அவன், வந்து விட்டோம் எப்படியென்றாலும் வேலை செய்தே ஆகவேண்டும் என்ற நிலையில் மிகக் கஷ்டப்பட்டு வேலைசெய்துகொண்டிருந்தான்.

அவனது வேலைக்கு வயது ஒரு மாதத்தை அண்மித்துக் கொண்டிருந்தது. ஒருநாள் வேலை தொடர்ந்து செய்தபோது கைகளில் தாளமுடியாத வலி. சிறிது கைகளுக்கு ஓய்வு கொடுப்போம் என்ற நிலையில் சுற்று முற்றும் முதலாளி வருகிறாரா என்று பார்த்துவிட்டுபொருட்காட்சி அரங்கில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த விதம் விதமான கார்களை ரசித்தபடி நின்றுவிட்டான். முதலாளி வருவதை அவன் கவனிக்கவில்லை. கலோ...நோ வேர்க்.....திரும்பிப் பார்த்தான். அருகே அல்சேசன் நாயுடன் முதலாளி ...அவனுக்கு விளங்கி விட்டது. இதயம் ஒரு முறை நின்று இயங்கத் தொடங்கியது. பேசின்ற உணர்வு முதலாளி "கெட் அவுட்" என கூறினான். தொடர்ந்து அல்சேசன் நாயும் உறுமியபடி குரைத்தது. அவன் துடைப்பத்தை வைத்துவிட்டு அரங்கத்தை விட்டு வெளியேறினான். அவன் பாவித்த துடைப்பம் வேலையில்லாமல் வெளியே நின்ற இன்னோர் தமிழனின் கைக்கு மாறியது.

அவன் செய்த வேலை பறிபோய் எட்டு மாதங்கள் கடந்துவிட்டது. அரசாங்கம் கொடுத்த உதவிப் பணத்தில் ஒருவாறு வாழ்க்கையை செலுத்திவந்தான். உதவிப்பணம் இன்னும் ஒரு மாதத்தில் நின்றுவிடும். வீட்டிலிருந்து, வெளிநாட்டிற்கு இவனை அனுப்பிய பணம் வட்டி வளர்வதாக கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. எப்படியாகிலும் வேலை எடுத்து விடுவேன் என்ற நம்பிக்கையுடன் வேலை தேடிக்கொண்டிருந்தான்.

வேலை செய்வதிலும் பார்க்க வேலை தேடல் மிகுந்த கஷ்டத்தை கொடுத்தது. ஒவ்வோர் இடமாக வேலை கொடுக்கும் நிலையங்கள், உணவுக் கடைகள் போன்றவற்றிலேயே வேலை தேடிக் கொண்டிருந்தான். வேலை தேட அவன் ஒவ்வோர் படியாக ஏறும் போது சிலர் கருமையாக அவனைப் பார்த்து வேலையில்லை என்று சொல்வதும் இன்னும் சிலர் இவன் படியில் ஏறியவுடன் சமிக்கையாலேயே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

இல்லை என்பதும், இன்னும் சிலரோ இன்று இல்லை, நாளை வா என்பதும், நாளை நம்பிக்கையுடன் வரும்போது இப்போ இல்லை, இன்னும் சில நாட்களில் வா என்று ஏமாற்றுவதும் அவர்களுக்கு ஒர் பொழுது போக்காகவும் இவனுக்கு மிகுந்த வேதனையாகவும் இருக்கும்.

இப்போதெல்லாம் ஒருவாறு பிரெஞ்சு மொழிச்சொற்கள் சிலவற்றை பொறுக்கிவிட்டான். இது அவனது வேலை தேடலுக்கும் ஓரளவு போதுமானதாகவிருந்தது. வழமைபோல் ஒர்நாள் வேலை தேடிக் கொண்டிருந்த சமயம், இன்னுமொரு தமிழ் இளைஞனும் ஒரே இடத்தில் வேலை தேடுவதற்காக சென்றசமயம் சந்தித்து தங்களைஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி கொண்டனர். இவன் அவனைவிட ஒரளவு அதிஷ்டசாலி தான். இவன் தொடர்ந்து ஆறுமாதம் வரை ஒர் உணவு விடுதியில் தொடர்ச்சியாய் வேலை செய்து முதலாளியால் நிற்பாட்டப்பட்டு தற்போது அரசாங்கத்தினால் கொடுக்கப்படும் வேலையற்றோருக்கான உதவிப்பணத்தை பெற்றுக்கொண்டு வேலைதேடிக்கொண்டிருக்கிறான். இவன் தனது வேலை நிற்பாட்டிய விதத்தை அவனுக்கு கூறினான்.

இவன் வேலை செய்த இடத்தில் புதிதாக ஒர் இளைஞன் வேலை செய்யவந்தான். புதிதாக வந்த இளைஞன் நன்றாகமொழி தெரிந்ததுடன், சமையல்காரருக்கும், முதலாளிக்கும் ஏற்றவிதத்தில் ஓடி ஆடி அதிகமாக வேலை செய்துகாட்டியும், அவனைப் பற்றி கோள்மூட்டியும் அவனை முதலாளியிடம் சொல்லி நிற்பாட்டி தனது நண்பன் ஒருவனை வேலைக்கு எடுத்துக்கொண்டான்.

நம்மவர்கள் வேலைக்காக செய்யும் வேலைகள் எரிச்சலையூட்டியது. எம்மவர்கள் அகதியாய் வந்தும் தான் வாழ்ந்தால் போதும் என்ற நினைப்பு. எப்போது தான் எம்மவர்கள் திருந்தப் போகிறார்கள் என்று நினைத்துக்கொண்டான்.......

இப்போது இருவரும் ஒருமித்து வேலைதேட ஆரம்பித்து விட்டனர். ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்தித்து வேலை தேடுவார்கள். வேலை தேடுவதற்காய் நடந்து செல்லும் சமயங்களில் நாட்டு நடப்புக்கள், இங்குள்ளவர்களின் வெளி நாட்டு வாழ்க்கை, முன்னைய வேலை அனுபவங்கள், அவரவர் குடும்ப நிலைமைகள் பற்றி உரையாடிக்கொள்வார்கள்.

ஒரு, நாள் அவன் கூறினான், நாங்களெல்லாம் இங்கை வந்து இப்பிடிப்பட்ட வேலைக்கு நாயாய் அலையிறம். எங்கட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

நாட்டிலே கட்டுதல், கழுவுதல் என்றாலே அருவருத்த இந்த வேலைகளை நாங்கள் செய்யமாட்டம் என்கிறதும். வேலை செய்யிற ஆட்களை பார்த்து பகிடிபண்ணுறதும். ஆனால் இங்கை வந்து இந்தவேலைகளுக்கு எவ்வளவு போட்டி.

ஓமோம்.....உண்மைதான் எங்கடை ஆட்கள் வந்ததும் வேலை செய்யவேண்டிய நிலை. வெளிநாடு வெளிக்கிட்ட கடன் குடும்ப நிலைமைகள், எதிர்கால கேள்விக்குரிய வாழ்க்கையிலை மொழியைபடிக்க ஒரு நல்ல வேலை எடுக்க முடியாதநிலை. அவன் பல மாதமாய் முயற்சி செய்து ஒருவாறு கட்டிடம் ஒன்றில் உதவியாளாக, வேலை கிடைத்துவிட்டது. அவனுடன் வேலை தேடிய இவனுக்கு வேறோர் இடத்தில் வேலை. அவன் வேலை செய்யும் இடத்தில் அறுவர் வேலை செய்கின்றனர். இவன் மட்டும்தான் தமிழன்.

எப்படியாவது இந்த வேலையில் நின்று பிடிக்கோணுமென்று எல்லோருக்கும் வளைந்து கொடுத்து சொல்லுற வேலைகள்எல்லாவற்றிற்கும் ஆமாம் போட்டு வேலை செய்தான். கூடவே இவனது சக்திக்கு அதிகமான சுமைகளை உடம்பை வளைத்து மாடிகளுக்குத் தூக்கி சென்றான். இதனால் அவனது உடம்பில் சோர்வும், களைப்பும் அதிகமாகி விட்டது.

கட்டிட வேலையில் ஒரு மாதம் வரை வேலை செய்திருப்பான். அவனோடு வேலை செய்யும் இன்னுமொரு சக தொழிலாளி தனது வேலைகளையும் இவன் தலையில் சுமத்திவிடுவான், ஒருநாள் இது என்னுடைய வேலை இல்லை உன்னுடைய வேலை என்று நேரடியாக கூறிவிட்டான். சக தொழிலாளியோ அவனது பலக்குறைவு, மொழி தெரியாமையை வைத்து கன்னத்தில் அறைந்துவிட்டான். அவனும் மண் அள்ளும் மண்வெட்டியால் அடித்துவிடவே மற்றைய தொழிலாளர்கள் அவனிற்கு அடித்துவிட்டனர். ஆதலால் இனிமேல் இவர்களோடு வேலை செய்ய முடியாது என்ற முடிவில் வேலையைவிட்டு வந்துவிட்டான்.

நாட்கள் நகர்ந்தன. இப்போது அவனிற்கு வேலை தேடுவது வெறுத்துப்போய்விட்டது. எடுத்தவேலையையும் நல்லபடியாய் தொடரமுடியாத நிலை. வேலை தேடுவதற்கு புறப்பட்டு வீதியில்சென்றால் வேலை கிடைக்காது என்ற நம்பிக்கை. வேலை கேட்பதற்கே மனமில்லாமல் அறைக்குள்ளேயே அவனை முடங்கிக்கிடக்க செய்துவிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

அவனது அறை நண்பர்கள் அவனது பரிதாப நிலைமை- யையெண்ணி இன்னுமொரு வேலை எடுத்துக்கொடுத்தனர். முதல் நாள் வேலைக்குப் போகும்போதே அவனது நண்பன் "இதுதான் நான்உனக்கு எடுத்துத்தாற கடைசி வேலை' கவனப்பிட்டை உனக்காக சொல்லி வைச்சு எடுத்துத்தாறன்" என்று சொல்லி அனுப்பினான்.

மிகக் கஷ்டமான வேலைதான். உணவுக் கடையில் கழு வல் வேலை. பதின்மூன்று மணி நேரவேலை. காலை வேலைக்கு சென் றுக் நடு இரவுதான் திரும்பிவர வேண்டும். இடையில் தரும் பிற்பகல் ஓய்வுநேரம் இரண்டு மணித்தியாலமும் சிலவேளை முதலாளி இவனை மறித்து வேலை செய்விப்பார். மற்றைய நாட்களில் அறைக்கு சென்று வர நேரம் போதா தனாலையால் வீதியோர வாங்கில் அமர்ந்தி- ருப்பான்.

உணவுக் கடையில் கழுவல் வேலை உட்பட சமையல்கா ரருக்கும் உதவி. அவன்தான் எல்லோருக்கும் உதவி ஆள். ஒருவாறு இருமாதங்களை கடத்திவிட்டான். சில வேளைகளில் குளிப் புகையால் கண்கள் எரிந்து கண்ணீர் வருகின்ற சமயம் உண்மையிலேயே அவனது மன மும் உளைச்சல்பட்டு கண்ணீரை சிந்தும்.

சொந்த நாட்டில் தொடருகின்ற வேதனைகள் வெளி நாட்டிலுமா தொடர்கின்றன....? அங்கே சொந்த மண்ணில் அடிமை நிலை பணமென்பதை வைத்து மனிதனை சுரண்டுகின்ற ஓர்வடிவம்.

ஓர்நாள் முதலாளி, பிற் பகல் ஓய்வு நேரத்தில் அவன் உணவுக் கடையைவிட்டு வேலை முடிந்து வெளியேறும்போது இன்றுநிறைய பேர் சாப்பிட வருவதாகவும் உருளைக்கிழங்கு சீவி, வெட்டும் படியும் கட்டளையிட்டான். அவன் என்ன நினைத்தானோ என்னவோ - "என்னால் இன்று வேலை செய்யமுடியாது" என்று விட்டான். முதலாளிக்கு முகம் சிவந்துவிட்டது. முகத்தில் உள்ள மீசை ஒருமுறை துடித்தது. முதலாளி, முகத்தை கடுமையாக்கியபடியே, சொந்த நாட்டில் சாப்பிட்டிற்கே வழியில்லாதவர்கள் என்ரை கடை சாப்பாட்டையும் சாப்பிட்டுவிட்டு உனக்கு வேலை செய்ய முடியாது என்னுமா சொல்கிறாய்? என்றான். தம் என்னால் முடியாது. மற்றைய சக வேலையாட்கள் ஓய்வு எடுக்கஎன மட்டும் நிற்கவைத்து வேலை செய்விப்பது நல்லதல்ல.....

"அவர்கள் இந்நாட்டவர்கள். நீ வெளிநாட்டவன் எங் களைப் பொறுத்தவரையில் ஓர் பிச்சைக்காரன், வாழ வழியின்றி வாழ்வு தேடிவந்த அகதிகள்". அவனுக்கு ஆத்திரத்தை அடக்க முடியாமலிருந்தது.

www.tamilrangam.net

எவ்வளவோ சொல்ல வேண்டுமென்று துடித்தான். ஆனால் முடியவில்லை. "இன்டையோடை நான் வேலைக்கு வரல்லை. நாளைக்கு என்ரை சம்பளத்தை எடுக்க வருவன்" என்று இவன் தனக்குத்தெரிந்த அரை குறை பிரெஞ்சு மொழியில் சொன்னபடி முதலாளியின் முகத்தைப் பார்க்காமல் வெளியேறிவிட்டான்.

வேலையில்லாமல் போனதன்பின் அறைவாடகை, உணவுக்கே பெரும் திண்டாட்டமான நிலைமை. உழைத்த பணம் ஓரிருமாதங்களில் செலவழிந்துவிட்டது. நண்பர்கள் அவனிற்கு உதவமறுத்தனர். உவன் வேலைக்கு சரிப்பட்டுவரான், பெரிய ரோசக்காரன், வெளிநாடுவந்திட்டான்கள். ஒருமாதிரி பொறுத்துக்கொண்டு வேலை செய்ய வேண்டியதுதான். உதவினாலும் பிறகு எங்களுக்கு உபத்திரவம் தான். அவனது நண்பர்கள் அவனிற்கு கேட்கக்கூடியதாக கூறினார்கள்.

ஓ....... எவ்வளவு கபடமான உலகம்... இது அவனுக்கு மட்டுமுரிய பிரச்சனை அல்ல. வேலை தேடுதல், வேலை நிற்பாட்டுதல், வேலையில் சுரண்டல், இப்படி இந்த முதலாளித்துவ அமைப்பில் தொடர்ந்து கொண்டேயிருக்கும் பிரச்சனைதான்.

..... மீண்டும் ....பழைய பல்லவி...... செயின் நதியின் பாலத்தை கடந்து வேலை தேடுவதற்காய் அவன் சென்று கொண்டிருக்கிறான்.

அவனைப் போல் இன்னும் பலர்.....
தயவு செய்து வேலை தருவீர்களா?

மூந்தும்.



www.tamilrangam.net

# விமர்சனக் களம்

இன்றைய சமூகத்தின் தேவையை உணர்ந்து, எம்மவர்கள் வெளி நாடுகளில் அந்நியமாகிப் போகின்ற நிலைமையில், மக்களை தேசத்தோடு ஐக்கியப்படுத்தும் வகையில் வெளியாகின்ற தேடல் சஞ்சிகை இலக்கியத்தை, அதன் தரத்தை விரும்புகின்ற எவரும் நேசித்தே தீரவேண்டும்.

ஒரு நல்ல இலக்கியத்தின் தரத்தை, நோக்கத்தை அடைய தேடல் புறப்பட்டுள்ளவேளையில் தேடல்—ஒன்று, இரண்டு பற்றி குறிப்பிடும் போது இன்னும் செழுமை தேவை.... தேவை என்றேபடுகின்றது. இது தேடலின் ஆரம்பமாகவும் சரியான திசையில் நகருமா என்பது கேள்வியாகாமல், நகர்த்தியே தீரவேண்டும் என்றுதான் சொல்லத் தோன்றுகின்றது.

சஞ்சிகையில் வெளியான கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், கேலிச் சித்திரங்கள் நிறையவே சிந்திக்கவைக்கின்றது. சுகன், அருந்ததி இரவி ஆகியோரின் கவிதைகள் அறிவுபூர்வமாய் சிந்திக்கவைக்கின்றது.

கட்டுரைகளும் பிரயோசனமாய் அமைந்துள்ளது. மு. தளையசிங்கமும் — மார்க்சிசமும் என்ற ஆய்வுக் கட்டுரை பற்றி ஆசிரியர்குழுவினர் என் பிரசுரிக்கப்படுகின்றது என்பதையும் தளையசிங்கம் பற்றிய அறிமுகத்தையும் கொடுத்து பிரசுரித்தால் வாசிப்பவர்கள் குழப்பமில்லாமல்வாசிக்கக் கூடியதாகவிருக்கும்.

தேடலின் ஆரம்பத்தைவைத்து எதையும் முழுமையாய் எடைபோடமுடியாவிடினும், வெளிநாடுகளில் வாழ்கின்ற மக்களுடன் தன்னை எவ்வாறுஇனம் காட்டி, தனது செயற்பாட்டை தொடரப்போகின்றது என்பதை இனி வரும் காலங்களிலேயே தீர்மானிக்கக்கூடியதாகவிருக்கும்.

கோவை நந்தன் 27.3.89



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

'தேடல்' ஆசிரியர் குழுவினருக்கு,

பாரிஸின் இயந்திரமான சூழ்நிலையில் இருந்தும் கூட மக்களின் நலன் கருதி முறையான அரசியல் கலை இலக்கியத்தினூடாக தேடுதல் நடாத்திவரும் 'தேடல்' பத்திரிகைக்கு என் வணக்கங்கள். இங்குகலை வளர்க்கிறோம் என்ற போர்வையில் காசுசேர்க்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டிருப்பவர் ஒருபுறம். சில கோட்பாடுகளை மனப்பாடஞ் செய்துகொண்டு பேசிப்பேசிக் காலத்தை கழிக்கும் மட்டமான புத்திஜீவிகள் மறுபுறம், இரண்டிற்கும் நடுவே உண்மையைத் தேடவேண்டும் என்கின்ற உந்துதல் ஒரு சிலருக்காவது இல்லாமல் இல்லை என்பதனை உங்கள் சஞ்சிகையை படித்ததன் மூலம் தெரிந்துகொண்டேன்.

பாரபட்சமற்ற விமர்சனம் ஆரோக்கியமான நகர்வுக்கு துணைநிற்கும் என்ற ஆசிரியரின் கருத்தைக் கவனத்திற்கொண்டு சிலவற்றை நிறைகளை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உங்கள் நூலின் தொடரும் பயணத்தில் நீங்கள் எழுதிய கருத்துக்கள் ஏற்கக்கூடியதாக இருந்தாலும், நீங்கள் இத்தேடுதல் தன்மையிலிருந்து தடம்புரளுவீர்களானால் உங்களைப் பேச்சுக்களைவென்ற செயலற்ற வாய்வீரர்களாகத்தான் நீங்களும் கணிக்கப்படுவீர்கள்.

மக்கள் கலை இலக்கிய அமைப்பு என்கின்ற பெயரைத்தாங்கி அதன் கீழ் இந்நூலினை வெளியிடும் நீங்கள், கலை இலக்கியம் சார்ந்தவிடயங்களை கூடியளவு வெளியிட வேண்டும் என்பது அபிப்பிராயம்.

கலை வேறு, அரசியல் வேறு அல்ல. தேசப்புரட்சிக்கான, மனித சமுதாயத்தின் மாற்றத்துக்கான உண்மையான தெளிவான கருத்துக்களைக் கலை இலக்கியத்தினூடாக வெளிப்படுத்த வேண்டும். அந்தவகைய கருத்துக்கள் இந்நூலில் பிரதிபலிக்காமல் இல்லை. பிரதிநிதிகள், முகமிழந்து போனவர்கள், வாரிசுகள் போன்ற கவிதைகள் இவற்றைப் பிரதிபலிப்பதாக உள்ளன. பிரதிநிதிகள்- நாட்டின் யதார்த்தநிலையை துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது. அடுத்த அருந்ததியின் முகமிழந்து போனவர்கள் என்னும் கவிதை எம்மை ஒருகணம் ஆழமாக சிந்திக்க வைக்கிறது. அடுத்து சூரியனின் கவிதை இன்றைய இளம் சிறார்களின் யதார்த்த நிலையை வெளிப்படையாக காட்டுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

அடுத்து முன்பராணியின் பச்சோந்தி என்னும் சிறுகதை சிந்திக்கவைக்கிறது. அந்நியநாட்டில் அகதிப் போர்வையில் வாழுகின்ற மக்கள் தமக்கு அகதிக்காட் கிடைக்காத பட்சத்தில் இலங்கையில்தேர்தல், சமாதானப் பேச்சுவார்த்தை, மாகாண ஆட்சி போன்ற கதைகள் பெரியளவில் அடிபடும்போது தம்மை நாட்டை விட்டு அனுப்பிவிடுபவார்களோ என்றபீதியில்பிரச்சனை தொடர்ந்து நடக்க வேண்டுமென்று பிரார்த்திப்பதும் கொள்கைப் பிடிப்பு இல்லாதவர்கள், தம் நாட்டில் நடக்கும் பிரச்சனைகளை அறியவிரும்பாதவர்கள், உண்மையை அறிய மறுப்பவர்கள் , எந்த இயக்கம் முன்னணியில் இருக்கின்றதோ அவ்வியக்கத்துக்கு கொடிகாட்டுபவர்களின் மொத்தப் பிரதிநிதியாகவே இச்சிறுகதையில் வரும் பேரம்பலம் உள்ளார். மொத்தத்தில் இச்சிறுகதை இங்குள்ள இன்றைய சமகால நிகழ்வுகளைப் பிரதிபலித்துக்காட்டுகிறது.

அடுத்து திரு தேவராஜா, திரு. ராஜதுரை ஆகியோரின் விமர்சனங்களுக்கு நீங்கள் கொடுத்த விளக்கம் மிகவும் நன்று. அவர்கள் அவ்வாறு தெளிவில்லாமல் குழம்புவதற்குக் காரணம் உங்கள் கடினமான நடை. சாதாரண மக்களும் இலகுவில் விளங்கத்தக்கவகையில் எளிமையான நடையில் உங்கள் எழுத்துக்களை நகர்த்துவீர்களேயானால் இத்தகைய குழப்பங்கள் ஏற்படாது என எண்ணுகிறேன்.

சஞ்சிகையில் ஆங்காங்கே எழுத்துப்பிழைகளும் அதிகமாக காணப்படுகிறது. இனிவரும் ஏடுகளில் இதைக் கவனத்திற்கு கொண்டு செயற்படுவீர்கள் என நினைக்கிறேன். அத்துடன் இலக்கிய அம்சம் கொண்ட கவிதைகள் சிறுகதைகளை அதிகரித்து புத்தகத்தை மெருகூட்டுங்கள். அட்டைப்படம் நன்றாகவுள்ளது. ஆங்காங்கே துணுக்குகள் படத்துடன் நன்றாக இருக்கிறது. மொத்தத்தில் இங்கு வெளியிடப்படும் ஏனைய சஞ்சிகைகளுடன் ஒப்பிடுகின்றபோது இத்தேடல் தரம்வாய்ந்த இலக்கிய ஏடாக உள்ளது என்பதில் ஐயமில்லை. எந்த ஒரு

விடயமும் தாமாக நினைத்துச் செய்வதில்லை. சூழ்நிலைகள் தான் எம்மைச் செய்யத்தூண்டுகின்றன. ஆகவே தற்கால சூழ்நிலையை கருத்திற் கொண்டு இதனைத் தொடர்ந்து நல்ல முறையில் நகர்த்துவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

நன்றி. — இலக்கியா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

அன்புள்ள ஆசிரியருக்கு,

தங்கள் "தேடல்" பத்திரிகை பாராட்டக் கூடிய அளவிலும் இருக்கிறது. அதேவேளையில் குறைகூறக்கூடிய . சில குறைகளும் இருக்கிறது. அதாவது உங்கள் பத்திரிகையில் எழுத்துக்கள் விளங்கவில்லை. அதோடு கதைகளும் அதிகமில்லை. இனிமேலாவது இதில் விரைவிலும் கவனம் செலுத்தவும்.

மேலும் தங்கள் பத்திரிகை, சித்திரை மாதந் தான் என்னால் படிக்கமுடிந்தது. காரணம் முதல் இரண்டு பத்திரிகையும் எனக்கு கிடைக்கவில்லை. ஆகவே, தங்கள் முதல் இருபத்திரிகையையும் படிக்க, நான் ஆவலாக இருக்கிறேன். அதனால்எனக்கு அவ்விரு பத்திரிகையையும் அனுப்புமாறு வேண்டுகிறேன்.

தவிர, மேலும் நான் கூறவேண்டியது தமிழீழத்தில் எத்தனையோ பத்திரிகைகள் தொடங்கி ஒரு சில பத்திரிகைகளே தற்போது வளர்ந்து வருகின்றன. மீதிப் பத்திரிகைகள் இடையிலேயே நின்றுவிட்டது. அதேபோல் இந்தப் பத்திரிகையும் இடையில் நிற்காமல், தொடர்ந்து வளர்ந்து செழிப்புற எனது வாழ்த்துக்கள். மேலும் என்னால் முடிந்த உதவியை "தேடல்" பத்திரிகைக்கு நான் செய்யக்காத்திருக்கிறேன்.

பத்திரிகை என்ற பெயரில்
பற்பல வந்து
பலவற்று போய்விட்டது.

தேடல் என்றொரு பத்திரிகை
தேசத்தை வளர்த்திட போகின்ற
தேன் தமிழ்ப் பத்திரிகை.

ஈழத்து மதிமாறன்.

கருத்துக்கள் கைவசம் இல்லாதவர்களிடத்தே தனிமனித தாக்குதல்களைத்தவிர வேறெதையும் எதிர்பார்க்க முடியாது.

- டாக்டர் கோ. கேசவன்

www.tamilrangam.net

தோழமையுடன்
'ஆசிரியர்'
'தேடல்' அவர்கட்கு

'தேடல்' இன் வளர்ச்சிக்கு முதலில் எமது வாழ்த்துக்கள் உரித்தாகட்டுக்கும். கருத்துக்களும், பத்திரிகைகளும் சுதந்திரமாக வெளிவர வேண்டும் என்பதில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்றுமே உறுதியாக உள்ளது. அதுவும் குறிப்பாக நடுநிலை அமைப்புக்களின் வாயிலாக வெளிவரும் கருத்துக்கள் எம்மால் அவதானிக்கப்படுபவையாக மாத்திரமன்றி எமது தவறுகளை திருத்திக்கொள்ளவும் உதவியாய் இருந்து வந்திருக்கின்றன.

ஆனால், தேடல் மூன்றாவது இதழில் வெளியான தேடலின் பார்வையில் ஈ.பி.ஆர்.எல்.எப் என்ற கட்டுரை தொடர்பான எமது கருத்துக்களையும், தேடலது குழப்பமான நிலையையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முதலில் பாரோகிலர் தமது அறியாமையினால் அல்லது தவறான புரிந்துணர்வினால் தேடலையும், ஈ.பி.ஆர்.எல்.எப் ஐயும் தொடர்புபடுத்தினார்கள் என்பதற்காக அவசரப்பட்டு அள்ளித்தெளித்த எழுத்துக்களே அந்த ஆக்கம் என்பது எமதுகருத்து. அதுவும் தனிநபரின்பெயரில் இல்லாமல் தேடலின் சொந்தக்கருத்தாக இந்த ஆக்கம் வெளிவந்திருப்பது எம்மை தேடல் தொடர்பாக கவலையடையச் செய்வதுடன் மாத்திரமல்ல தேடலின் உறுதிப்பாடுகள் தொடர்பான கேள்வியையும் எழுப்பியுள்ளன.

ஒரு பக்கத்தில் 'பிரதிநிதிகள்' என்ற சகாப்தனின் கவிதை, இன்னும் சிலபக்கங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தை மட்டும் அலசிப்பார்க்கும் 'கோமதி'யின் தேர்தல் பார்வை, இவற்றுக்கு மகுடம் வைத்தது போல தேடலின் ஈ.பி.ஆர்.எல்.எப் தொடர்பான பார்வை. இவையெல்லாம் ஒன்றைமட்டும் எமக்குத் தெளிவாக்குகிறது. இன்று திட்டமிட்டு பரவலாக முடுக்கிவிடப்படுகிற ஈ.பி.ஆர்.எல்.எப் எதிர்ப்பு அலைக்குள் தேடலும் அகப்பட ஆரம்பித்துவிட்டது என்பதுதான் அது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

எமது ஸ்தாபனத்தின் இன்றைய நிலைப்பாடுகளை அதிதீவிரவாத இடது சாரிவாதிகள் சீரணித்துக் கொள்ளமாட்டார்கள் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். அவ்வாறான சக்திகளை திருப்திப்படுத்துவதற்காக நாமும் அதிதீவிர இடதுசாரிவாதத்துக்குள் விழுந்துவிடத்தயாராக இல்லை.

அதேவேளை இன்று 'தேசபக்தர்கள்', 'தியாகிகள்', 'தமிழ் இன உணர்ச்சி படைத்தவர்கள்' வேசம் போட்டு நிற்கும் வலதுசாரிச்சந்தர்ப்பவாதிகளும் எமது ஸ்தாபனம் அழிந்து போய்விடவில்லையேயென்று மிகவும் அக்கறையோடு கவலைப்படுகிறார்கள். இந்த சக்திகளின்நரித்தனமான சூழ்ச்சிகளையும் நாங்கள் புரிந்துகொள்கிறோம்.

அதிதீவிர இடதுசாரித்தனமும் வலதுசாரி சந்தர்ப்பவாதமும் ஒரு சரியான புரட்சிகர இயக்கத்திற்கு எதிராக அடிக்கடி கூட்டுச் சேர்ந்து கொள்வதை உலக வரலாற்றின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எம்மால் கண்டு கொள்ளமுடியும்.

இந்தக் கட்டத்திலேதான் 'தேடல்', 'ஈ.பி.ஆர்.எல்.எவ் மாகாண அரசில் இருப்பதன் மூலம் முதலாளித்துவத்தை உசுப்பி வளர்த்து விடும் வரலாற்று அவசியத்தை செய்யப்போகிறது, அதன்மூலம் தனது இடதுசாரி வர்க்க சிந்தனையை எல்லாம் 'பூர்சுவா' சேற்றிலே கரைத்துவிடப் போகிறது, ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியை சுற்றி ஊழல் பெருச்சாளிகளும், லஞ்சப் பேர்வழிகளும் வந்து சுற்றிப்படர்ந்து கொள்ளப்போகிறார்கள். ஈ.பி.ஆர்.எல்.எவ் முதலாளித்துவ நாடுகளில் உள்ள முதலாளித்துவ கம்யூனிஸ்டுக்கட்சிகளைவிட அதிக பிற்போக்குச் சக்திகளை தனக்குள் உள்வாங்கியிருக்கப் போகிறது" என்ற அரசியல் தீர்க்கதரிசன ஆரூடங்களையெல்லாம் கூறியதுடன் இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்து மாகாண சுயாட்சிப் பொறுப்பை ஏற்றதன் மூலம் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் பாதை இன்று முதலாளித்துவத்தின்பாதையாக மாறியுள்ளது என்றும் கூறியுள்ளது.

இன்று நாங்கள்(ஈ.பி.ஆர்.எல்.எவ்) தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை விட்டுக் கொடுத்துவிட்டதாகபிரச்சாரம் செய்கிறார்கள். நாங்கள் சமுதாய புரட்சியை மறந்து விட்டதாக பிரச்சாரம் நடக்கிறது. எமது ஸ்தாபனம் தேர்தல்கட்சியாக மாறிவிட்டதாக கொச்சைப்படுத்தப்படுகிறது. ஆனால், ஒருவிடயத்தை 'தேடல்' புரிந்து கொள்ளவேண்டும்.

www.tamilrangam.net

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை முழுமையாக நிலை நிறுத்துவதற்கான போராட்டமும், இலங்கை முழுவதும் வாழும் உழைக்கும் மக்கள் அனைவரினதும் வாழ்வில் விடிவை ஏற்படுத்துவதற்கான சமுதாயப் புரட்சிப் போராட்டமும் எதிர்காலத்தில் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கமுடியாததாகவே அமையும். அதை நோக்கிய மாறும் காலகட்டமே இலங்கையின் இன்றைய வரலாற்றுக் கட்டமாகும்.

இந்த மாறும் காலகட்டம் தானாகவே இயங்கும் என்று கருதிக்கொண்டு நாம் செயலற்றவர்களாக, அதிதீவிரவாதக் கருத்துக்களை யதார்த்தச் சூழ்நிலைக்குத் தொடர்பற்றவகையில் பேசித்திரியும் வாய்வீச்சு வல்லுனர்களாக இருக்கமுடியாது. பூரண உண்மையான சமுதாய ஓட்டத்திலிருந்து நாம் ஒதுங்கியோ தனிமைப்பட்டோ இருக்கமுடியாது.

ஒவ்வொரு வரலாற்றுக் கட்டத்திலும் புரட்சியாளன் தனக்குரிய வரலாற்றுப் பாத்திரத்தை நன்கு உணர்ந்து சரியான முறையில் ஆற்றியாக வேண்டும். புரட்சியாளன் எந்தவொரு காலகட்டத்திலும் வெறுமனே ஒரு பார்வையாளனாக இருக்கமுடியாது. அது அவனுக்கு சமுதாய நலனை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழிலாகும். இந்த தெளிவும், உணர்வும் எமக்கு அவசியமாகும்.

முதலாளித்துவம் தனது சவக்குழியை தானே தோண்டிக்கொள்கிறது. பாசிசத்தின் கொலை வெறியோ எண்ணற்ற சவக்குழிகளை நிரப்புகிறது.

இன்றைய நிலைமைகளை மேலோட்டமான பார்வையாகப் பார்க்கும் போது அவை குழப்பமாகத் தோற்றமளிக்கின்றன என்பதனால் நாம் இக்கால கட்டத்தில் ஓய்வு எடுத்துக்கொள்ளவோ, ஒதுங்கியிருக்கவோ முடியாது. இயக்கம் என்பது தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருப்பது. அதை இயங்கா நிலையில் ஒரு குறிப்பிட்ட கண நேரத்திற்கு கூட வைத்திருக்க முடியாது. அவ்வாறேதான் ஒரு புரட்சிகர இயக்கமும் அமையும். புரட்சிகர அரசியல் இயக்கத்தின் அங்கமாக இருக்க முனையும் ஒரு ஸ்தாபனமும் தொடர்ச்சியாக இயங்கிக்கொண்டேயிருக்கவேண்டும்.

ஒரு ஸ்தாபனம் தொடர்ச்சியாக இயங்குதல் என்பது புறநிலை யதார்த்தங்களை புரிந்து கொள்ளாமல் கண்மூடிக் கொண்டுசெயற்படுதல் என்பதாகாது. புரட்சி என்பதை அவசரத்தில்செய்யமுடியாது.

www.tamilrangam.net

ஒருபக்கத்தில் பேரினவாதமும், மறுபக்கத்தில் தமிழ் குறுகினவாதமும் தலைதூக்கி நிற்கின்றன. இவை வெறுமனே மொழிசார்ந்த உணர்வுக ளாக மட்டும் இல்லை. ஒன்றுக்கொன்று மாற்றுக் கொலை வெறித்த னத்தை உள்ளடக்கியவையாக உள்ளன. தொழிலாள வர்க்க த்தினதும் மற்றும் உழைக்கும் மக்களதும் புரட்சிகர வர்க்க உணர்வானது இந்த இனவாதத்தில் ஆழப் புதைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனவாதங்கள் ஒன்று மற்றதன் ஜனநாயக உரிமைகளை நிராக ரிப்பது மட்டும் அல்லது ஒவ்வொன்றும் தத்தமக்குள்ளேயே அடிப்படை ஜனநாயக மறுப்பையும், புரட்சிகர முற்போக்குச் சக்திகளை வேட் டையாடுவதை பணியாகக் கொண்டிருக்கின்றன. பாசிசக் கொலைவெறி யைப் பாராட்டித் தட்டிக் கொடுத்து வளர்க்கும் இந்த இனவாதங்கள் சமுதாயத்தின் முன்நோக்கிய நகர்வை கொஞ்சங்கூட அனுமதிப்பவை யாக இல்லை.

இந்த நிலையில் இலங்கையிலுள்ள புரட்சியாளர்களின் வரலாற்றுக்கடமை என்ன? அடிப்படை ஜனநாயகத்துக்காகப் போராடுவதா? இல்லையா? கொலைகாரத்தனமான இனவெறியிலிருந்து மக்களைப் பாதுகாப்பதா இல்லையா? இனவாதத்தின் பிடியிலிருந்து தொழிலாளவர்க்கத்தைமீட்டெ டுப்பதா இல்லையா? புரட்சிகர அரசியலின் முளையைக்கூட அனுமதிக் காத பாசிசத்தை அழித்தொழிப்பதா இல்லையா?

இவற்றை 'தேடக்' புரிந்து கொள்ள வேண்டும். வெறுமனே முதலா ளித்துவம், தொழிலாள வர்க்கம், சோசலிசப் புரட்சி, மார்க்சிய லெனினிசம் என சில சொற்களை உருப்போடுவதன் மூலமோ அல்லது அச்சொற்களை வைத்துக்கொண்டு எண்கணிதம் போட்டுப் பார்ப்பதன் மூலமோ புரட்சிகர அரசியல் நடைமுறைக்கான வழிகாட்டுதலையோ' புரிந்துணர்வையோ பெறமுடியாது.

அதுமாத்திரமல்ல ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சிக்கும் மாகாண அரசுக்கு முள்ள வேறுபாட்டையும் தேடல் புரிந்துகொள்ள வேண்டும். சிதை வுற்ற தேசத்தை புனரமைக்கும் பணியில் பலரது பங்களிப்பும் தேவை என்ற வகையில் மாகாண அரசானது ஒரு தேசிய அரசாகவே அமைக் கப்பட்டிருக்கிறது. அதில் பல்வேறுபட்ட சக்திகளும் உள்ளனர். அதில் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியானது வர்க்க சிந்தனை கொண்ட குறிப்பிட் டளவு எண்ணிக்கை கொண்ட உறுப்பினர்களையுடைய இறுக்கமான இடது சாரி அமைப்பாகவே இருக்கிறது. அதுமாத்திரமல்ல இன்று பலவித தடைகளையும் மீறி எமது ஸ்தாபனம் உழைக்கும் மக்களை தொழிற் சங்கங்கள் மூலம் ஒழுங்குபடுத்தி அவர்களை பலமான சக்தி யாக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இதனால் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் எதிர்காலம் குறித்து 'தேடல்' அர்த்தமில்லாத பீதி கொள்ளத் தேவையில்லை.

அத்துடன் தன்னுடைய பாசிச முதலாளித்துவத்தன்மைக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் எதிராக இருப்பதனால்தான் சிறிலங்கா அரசு இன்று ஈ.பி.ஆர்எல்எவ்க்கு எதிரான பொய்ப் பிரச்சாரங்களை முடுக்கிவிட்டிருப்பதுடன் மாகாண அரசை கலைக்கும் முயற்சியிலும் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது அத்துடன் தன்னுடன் ஒத்த கருத்துள்ள பிற்போக்கு சக்திகளுடன் கை கோர்க்கவும் முற்பட்டுள்ளது, என்பதையும் 'தேடல்' புரிந்து கொள்ளும் என எண்ணுகிறோம்.

மேலும் 'தேடலி'ன் வளர்ச்சிக்கு எமது ஸ்தாபனத்தின் வாழ்த்துக்களை மீண்டும் தெரிவிப்பதுடன் ஆரோக்கியமான கருத்துக்களையும், எமது மக்களின் விடிவுக்கான ஆலோசனைகளையும், எமது ஸ்தாபனம் குறித்த நெறிப்படுத்தல்களையும் நாம் எப்போதும் வரவேற்கிறோம்.

நன்றி.

தோழமையுடன்,
உமாகாந்தன்.
(ஈ.பி.ஆர்.எல்.எவ்)
பிரான்ஸ்

இவ் விமர்சனத்திற்கான பதில் மறுபக்கத்தில் உள்ளது.

விமர்சகர்களே!

உங்கள் விமர்சனங்களை தெளிவாகவும், சுருக்கமாகவும் எழுதி அனுப்புங்கள்.

www.tamilrangam.net

# தேடலின் பதில்

திரு. உமாகாந்தனின் வேதனை நமக்கு நன்கு புரிகிறது. ஒரு 'பிரச்சினை' குறித்து நாம் கொண்டிருக்கிற அபிப்பிராயம் எப்படியிருப்பினும் அதாவது அந்த அபிப்பிராயம் பற்றுதலாக இருந்தாலென்ன, வெறுப்பாக இருந்தாலென்ன இத்தகைய விருப்புவெறுப்புகளிற்கப்பால் விஞ்ஞான வகைப்பட்ட அநுகூலங்களையும், பிரதிகூலங்களையும் வகைப்பிரித்து அறிவது உண்மையைத்தேடும் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

அந்தவகையில் எமக்கு விஞ்ஞான பூர்வமாகப்பட்டதில் ஈ.பி.ஆர்.எல்.எவ் முன் முன்வரும் காலங்களில் இடதுசாரித்துவத்தில் இருந்து விலக்கிய பிரதிகூலங்களை விளக்கிய நாம் இதுகாறும் அதனது வளர்ச்சிப் படிகளில் அல்லது நடைபாதையில் அநுகூலமான (வரலாற்று முன்னோக்கு) செயற்பாடுகளை புறக்கணித்துவிட்டோம் என்பதற்காகவும் வருந்தப்படுகிறோம்.

அதில், ஈ.பி.ஆர்.எல்.எவ் இனருடன் உள்ள கருத்துப் போராட்டங்களில் மிகமுக்கிய அடிப்படை அம்சத்தை நாம் தெளிவுபடுத்தியாகவேண்டும். தேடலானது அடுத்தகட்டப் போராட்ட தகர்வில், ஈழம் பூராகவும் ஒரேயொரு கட்சியையே வலியுறுத்துகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட கட்சி என்பதன் மறுகருத்து "தமிழர் தமக்குள் ஏற்படுத்தும் ரத்தக்களரி" என்றே மக்களுக்கு விளங்கியிருக்கிறது. இந்த வகையில் ஈழமக்கள் எப்போதும் விழிப்பாக இருப்பார்கள்.

எனவே இன்றுள்ள இயக்கம் அனைத்தும், அதற்குள் இருக்கும் முற்போக்குச்சக்திகள் யாவும் (பெயரளவில், பேச்சளவில், மட்டும் முற்போக்கானவையல்ல) அத்தகைய ஒரேயொரு கட்சிக்குள் கரைந்து போக வேண்டும். அதற்கு மாறாக ஒவ்வொரு அமைப்புமே, தாம்தான்தான் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கப் போகிறோம் என்று கருதினால், ஈழமக்கள் கதி, நிர்க்கதியே. இந்த நிலைமை, ஈழத்தின் விவசாயத் தொழிலாள மக்களின் அந்தத்தைத் தூண்டும். இந்தப் பார்வைக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் இனரும் விதிவிலக்கானோர் அல்ல.

சமூக வளர்ச்சியில் இடதுபாதை, அன்றேல் வலதுபாதை என்ற இரு பாதைகள் தவிர வேறொருபாதைகிடையாது. இன்று ஏற்பட்டிருக்கும் தீர்வான மகாண சுயாட்சி (அல்லது தனித்தமிழீழம் கிடைத்தால்கூட)

www.tamilrangam.net


னும் அரசுப் பொறியமைவு முதலாளித்துவ சுரண்டல் பொறியமைவு என்பதை மேலும் விளக்கவேண்டிய அவசியமில்லை.

இந்த அரசுப்பொறியமைவில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இருந்தாலென்ன, அல்லது ஈரோஸ் இருந்தால் என்ன, தேடல் 3வது இதழில் எழுதிய பார்வை பொதுவானது. மேலும் திரு.உமாகாந்தனின் விமர்சனம் அத்தகைய பார்வையை அகற்றி நிர்மூலமாக்கிவிடவில்லை. ஏனெனில் அது விஞ்ஞானவகைப்பட்டது.

முதலாளித்துவத்திற்கு எதிர்நிலையில் உள்ள ரஷ்யாவிலேயே ஒரு வர்க்கம் அதிகாரமயப் போக்குடையதாகியது என்றால்.... முதலாளித்துவ அரசுப்பொறியமைவின் கீழ் இருக்கும் ஓர் இடதுசாரிக் கட்சி சோஷலிச உற்பத்திமுறைமையையும், சமுதாய உறவுகளையும் அமுல்படுத்த முடியுமா? இல்லை.

எம்மைத்திருப்திப்படுத்துவது இத்தற்காலிக அமைதியே தவிர, அதனுடன் ஒட்டியிருக்கிற அரசியல் தீர்வல்ல. இத்தற்காலிக அமைதிக்காக ஈ.பி.ஆர்.எல்.எவ் இரத்தத்தைச் சிந்தி செயற்பட்டதன் மூலம் அது யதார்த்தைச் சரியாகவே புரிந்திருக்கிறது. ஆனால், அதனுடன் ஒட்டியிருக்கிற அரசியல் தீர்வெனும் கயிற்றினால் ஈ.பி.ஆர்.எல்.எவ் தனது கற்றிக்கட்டப்படாமல் அதிலிருந்து விடுவித்துக்கொண்டு ஈழதேசம் பூராவும் ஒரே கட்சிக்கு அதனது முற்போக்கு சக்திகளை வளர்க்க வேண்டும். இது தவறினால், ஈ.பி.ஆர்.எல்.எவ். முதலாளித்துவத்தின் சேவகன் என்ற பாத்திரத்தினையே வகிக்கமுடியும்.

— ஆசிரியர் குழு



www.tamilrangam.net

பேணும் அமைப்புக்களும் சரி யாரும் கவனத்தில் எடுக்கவில்லை. தற்போது தென் இலங்கையில் கூட பாடசாலைகள் இயங்கமுடியாத நிலைக்கு வந்துள்ளன. தொடர்ச்சியாக இந்நிலை தோன்றுமாயின் வரலாற்றின் ஆரம்பகால "ஆதிகால காட்டுமிராண்டிவாழ்க்கை"க்கே எம் சந்ததியை இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

தற்போதைய நிலையில் இளம் தலைமுறை நாட்டை விட்டு வெளியேறவே துடிக்கின்றனர். இவர்கள் அகதிகளாக வந்த வண்ணமும் உள்ளனர். இவர்கள் வந்தவுடன் (ஐரோப்பிய நாடுகள்) வேலைக்கே செல்லத் தலைப்படுகின்றனர். இவர்களது கல்வி பன்னிரண்டு, பதின்மூன்று வயதுடன் முடிவடைந்துவிடுகின்றது. இங்கு வருபவர்களில் சிறுவயதுடையவர்களே அதிகம். ஒரு தலைமுறை அழிந்து கொண்டிருக்கின்றதென்றே கூறலாம். இவர்கள் ஐரோப்பிய நாடுகளில் தமது கல்வியைத்தொடர முடியாமைக்கு முக்கியகாரணம் தாம் பயணம் செய்த பணத்தை உழைப்பதும், அல்லது பெற்றோர் உறவினரின் வாழ்க்கைச் செலவுக்காக உழைப்பதுமாகும். எனவே இங்குள்ள அவர்களது உறவினர், நண்பர்கள், பாதுகாவலர் இவர்களது எதிர்காலத்தையும் நாட்டின் எதிர்காலத்தையும் மனதிற் கொண்டு செயலாற்ற வேண்டிய அவசியம் ஒன்று உள்ளது. இதற்கு இங்குள்ள தமிழ்க்கல்வி நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் இவற்றைக் கணக்கில் கொண்டு செயலாற்றவேண்டும். தனியே இவர்களுக்கு பிரஞ்சை போதித்தல் மட்டும் போதாது. இவர்கள் கல்வியை கைவிட்டு மூன்று, நான்கு வருடங்கள் ஆகின்றது. ஆகவே இவர்களை வழி நடத்த ஏனைய பாடங்களையும் போதிக்கவேண்டும். அல்லது அதற்கு வசதி செய்து தரவேண்டும். இதை இங்குள்ள அரசிடம் முறையிட்டு அதற்கான நடவடிக்கைகள் செய்ய வேண்டியது தமிழர் நலன்களைப் பேணுவதாக இங்கு பதிவு செய்யப்பட்ட அமைப்புக்களின் கடமையாகும்.

பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல் இங்குள்ள மத அமைப்பு நிறுவனங்கள் (ஜெகோவாசாட்சி, பெந்தெகோஸ்தே, அப்போஸ்தலர் சபைகள்) மட்டுமன்றி அவற்றின் ஏஜென்டுகளாக மாறிய, மாறிவரும் எம்மவர்களது உளுத்துப்போன மதபோதனைகளும், மாயவித்தைகளும்எங்கள் கல்வி இடைவெளியை பயன்படுத்தி அவற்றின் மீதுவியாபாரம் செய்கின்றன. அல்லது குதிரை விடுகின்றன. இவை கண்டிப்பாக




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

இக்காலகட்டத்தில் விமர்சனம் செய்யப்படவேண்டியதாகும்.

எனவே இருபது வயதிற்கு உட்பட்டவர்களை வேலைக்கு அனுப்புவதை இயன்றவரை தவிர்த்து அவர்களை கல்வியின் பால் நாட்டம் கொள்ளவைக்க வேண்டிய தேவை அனைவருக்கும் உள்ளது. எனவே மொழிவேறுபாடு அற்று இவர்கள் கல்வியின் பால் நாட்டம் செலுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். அறிவுச்சூனியத்துள் எம் எதிர்காலச் சந்ததியினர் அல்லல் படாமல் தடுக்கவேண்டியதுதற்போதைய எமது தார்மீகக்கடமையல்லவா?

பாரதன்



www.tamilrangam.net

## வாசகர்களே!

உங்கள் எண்ணங்களைத் தேடலுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தற்போதைய தொடர்புகட்கு**

P. SIVAPATHAM;

O. P. A. L;

110 AVENUE DE GE LECLERC

92100 BOULOGNE.

நிரந்தர முகவரி பின்னர் அறிவிக்கப்படும்.

வெளியீடு: மக்கள் கலை இலக்கிய அமைப்பு (பிரான்ஸ்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்